Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY ● மக்கள் தினசரி ●

நாதம் 01 பிரமோதூத ஸூ வைகாசி மீ 19 ஆம் உ சனிக்கிழமை (02 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹ 08 ஓசை 104

## பள்ளிவாசலுக்குள் இரண்டு கிரனேட்டுக்கள் பிடிபட்டன!

(அம்பாறை மாவட்ட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் குடியேற்றக் கிராமமான மத்திய முகாம் நகரத்திலுள்ள பள்ளிவாசலுக்குள் ஆயுதங்கள் வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்ததைத் தொடர்ந்து பள்ளிவாசல் தர்மகர்த்தாக்களுடன் விடுதலைப் புலிகள் சென்று பேசினர். இதன் பின் பள்ளிவாசலினுள் சென்று பார்த்தனர். பள்ளிவாசலினுள் முக்கியமான இடத்தில் இரு சக்திவாய்ந்த கிறனேட்டுக்கள் இருக்கக் காணப்பட்டன. இந்தக் கிரனேட்டுக்களை அம்பாறை மாவட்ட மத்திய முகாம் பகுதிப் பொறுப்பாளர்கள் முத்தலிவும், ராஜ்குமாரும் பொறுப்பெடுத்துச் சென்றனர். இந்த இரண்டு (6ஆம் பக்கம் பார்க்க)

## 4000 கிராமோதய சபைகள் நேற்றுடன் செயலிழப்பு

(கொழும்பு)

நேற்று முதலாம் திகதிமுதல் நாலாயிரம் கிராமோதயசபைகள் செயலிழந்து விட்டன.

இந்த மாதத்திற்குள் பதின் நான்காயிரத்து எழுநூற்றி நாற்பத்தைந்து கிராமோதய சபைகள் புதிதாக நிறுவப்படவுள்ளது என பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கிராம சபைகள் பிரிவிலும் கிராமோதய சபைகள் நிறுவும் பணிப்புரைகள் மாவட்ட அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், மாகாணசபையினர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் (6ஆம் பக்கம் பார்க்க)


## கடவுச்சீட்டில் அரச ஊழியரின் சலுகை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

அனைத்து நாடுகளுக்குமான கடவுச்சீட்டுப் பெறுவதில் அரசாங்க ஊழியர்களுக்கு இருந்த சலுகை நேற்றைய சுற்று நிருபத்துடன் இனிமேல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு காலமும் அரசாங்க ஊழியர்கள் தமது கடவுச்சீட்டுகளுக்கு மத்திய கிழக்கு, கிழக்காசிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கு 300 ரூபா மட்டும் செலுத்தினால் போதும். ஏனைய பொதுமக்கள் இத்தொகையுடன் ஆயிரம் ரூபாவும் மேலதிகமாகச் செலுத்த வேண்டியிருந்தது. அதாவது 1300/- ரூபா செலுத்த வேண்டும்.

ஆனால் தற்போது அரசாங்க ஊழியர்களும் இந்த (6ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவின் அழைப்பின் பெயரில் அவரைச் சந்தித்துப் பேசுவதற்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) தலைமையில் தூதுக்குழு நேற்றுக் காலையில் பலாலி விமான நிலையத்திலிருந்து அரசாங்கம் அனுப்பிய விசேட விமானத்தில் கொழும்புக்குச் சென்றது. திருமதி பாலசிங்கம், மகளிர் முன்னணித் தலைவி செல்வி ஜெயா, திரு. யோகரத்தினம் யோகி. சுரேஷ் திரு. மகேந்திரராசா, திரு. அன்ரன் பாலசிங்கம் ஆகியோரை முதல் படத்திலும் அவர்கள் விமானத்தில் ஏறுவதை இரண்டாவது படத்திலும் காணலம்.

## சொக்கனுக்கு மணிவிழா

(யாழ்ப்பாணம்)

முதுபெரும் எழுத்தாளர் சொக்கன் அவர்களின் மணி விழா கொண்டாட்டங்கள் இன்று சனிக்கிழமை காலை எட்டுமணிக்கு ஆரம்பமாகின்றது.

இவ்விழாவில் எழுத்தாளர் சொக்கனின் 'மாருதப்பிரவல்லி' நாடக நூல் வெளியீடும் இடம் பெறும் இதன் வெளியீட்டுரையை பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் (6 ஆம்பக்கம் பார்க்க)

# மாகாணசபையைக் கலைக்க உடன் சட்டம் வரும்!

## 2000 மெ. தொன் வெங்காயம் இறக்குமதி

(கொழும்பு)

வெங்காயத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை போக்குவதற்காக கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் இரண்டாயிரம் மெற்றிக் தொன் பெரிய வெண் (6ஆம் பக்கம் பார்க்க)

## சிவகுமாரனின் கொடி-வாரம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய்ச் சந்தியில் அமைக்கப்பட்டுவரும் தியாகி சிவகுமாரன் நினைவாலயமும், சிலை அமைப்புக்குமான நிதிக்கான கொடித்தின வாரமாக இன்று முதல் ஒரு வாரகாலத்திற்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்களின் ஆதரவுடன் நினைவாலய அமைப்புக்குழுவினரால் ஏற்படுத்தப்பட் (6 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளுக்கு பிரேமா உறுதி

(கொழும்பு)

## பெண் குத்திக் கொலை

## கிராமங்களுக்கு

ளர் சொக்கன் அவர்களின் மணி விழா கொண்டாட்டங்கள் இன்று சனிக்கிழமை காலை எட்டுமணிக்கு ஆரம்பமாகின்றது.

இவ்விழாவில் எழுத்தாளர் சொக்கனின் 'மாருதப்பிரவல்லி' நாடக நூல் வெளியீடும் இடம் பெறும் இதன் வெளியீட்டுரையை பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம்

(6 ஆம்பக்கம் பார்க்க)

# உடன் சட்டம் வரும்!

## விடுதலைப் புலிகளுக்கு பிரேமா உறுதி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைப்பதற்கு வெகு விரைவில் ஒரு மசோதாவைப் பாராளுமன்றத்தில் அரசு சமர்ப்பிக்கும் என ஜனாதிபதி பிரேமதாசா நேற்றுச் சந்தித்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா தலைமையிலான குழுவிடம் தெரிவித்தார்.

ஆறாவது சட்டத்தைத் திருத்துவது சம்பந்தமாகவும் உடன் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் ஜனாதிபதி பிரேமதாசா உறுதியளித்தார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று கொழும்பில் சுசரித்த மண்டபத்தில் மூன்று மணி நேரமாக பேச்சு வார்த்தை நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் செயலாளர் திரு.யோகரட்ணம்யோகி திருமதிபாலசிங்கம்விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணித் தலைவி செல்வி ஜெயா ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியுடன் வடக்கு கிழக்கு சமாதானக் குழுவின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## 2000 மெ. தொன் வெங்காயம் இறக்குமதி

(கொழும்பு)

வெங்காயத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை போக்குவதற்காக கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் இரண்டாயிரம் மெற்றிக் தொன் பெரிய வெண்

(6ஆம் பக்கம் பார்க்க)

அமைக்கப்பட்டுவரும் தியாகி சிவகுமாரன் நினைவாலயமும், சிலை அமைப்புக்குமான நிதிக்கான கொடித்தின வாரமாக இன்று முதல் ஒரு வாரகாலத்திற்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்களின் ஆதரவுடன் நினைவாலய அமைப்புக்குழுவினரால் ஏற்படுத்தப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பெண் குத்திக் கொலை

(திருக்கோணமலை)

கந்தளாய்ப் பொலிஸ் பகுதியில் உள்ள வெண்டரசன்புரம் என்ற இடத்தில் ஏ. எம். குசுமாவதி (29) என்ற குடும்பப் பெண் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

இச்சம்பவம் குறித்துச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## புலிகள் முக்கியஸ்தர்கள் ஈரோஸ் பாலகுமார் சந்திப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச்செயலாளர் யோகரெட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரை ஈழவர் ஜனநாயக முன்னணிச் செயலதிபர் வே. பாலகுமார் நேற்று கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இக் கலந்துரையாடலில் ஆறாவதுதிருத்தச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக பாராளுமன்றத்தில் ஈழவர் ஜனநாயக முன்னணியினர் கொண்டுவரவுள்ளபிரேரணைபற்றியும் வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைப்புப் பற்றிக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிகின்றது.

## கிராமங்களுக்கு மின்சாரம்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் கிராமப் புறங்களுக்கு மின்சார விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்காக ஏழு கோடியே முப்பது லட்சம் ரூபாவை இந்த வங்கி வழங்கியுள்ளது. இதன்படி ஆயிரத்து எண்ணூறு கிராமங்களுக்கு மின்சாரம் கிடைக்கவுள்ளது.

மணில்லாவில் இதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

## திருமலையில் இருபொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டன

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள இரு பொலிஸ் நிலையங்கள் அண்மையில் மூடப்பட்டுள்ளன,

கன்னியா, அல்லஸ் தோட்டம் ஆகிய பகுதிகளில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இரு பொலிஸ் நிலையங்களே இவ்வாறு மூடப்பட்டன.

விடுதலைப் புலிகளுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையே இது குறித்து நடைபெற்ற பேச்சு வார்த்தைகளையடுத்தே இவை மூடப்பட்டன. (67)

## வடக்குக் கிழக்குப் புனர்வாழ்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்குப் புனர்வாழ்வுக் கூட்டம் இம்மாதம் 9ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 8 ஆம் திகதி மட்டக்களப்புஉதவிஅரசாங்கஅதிபர் பணிமனையில் வட - கிழக்குப் பகுதி அரசாங்க அதிபர்களின் கூட்டம் நடைபெற உள்ளது. அதைத்தொடர்ந்து மறுநாள் 9 ஆம் திகதி வட - கிழக்குப் புனர்வாழ்வுக் கூட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்தேவி ரயில் பெட்டிகள் சீர்கேடாக உள்ளன

(கொழும்பு)

கொழும்புக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் யாழ்தேவி மற்றும் ரயில் பெட்டிகளின் நிலமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருகின்றன.

ஆரம்பத்தில் மக்கள் சௌகரியமாகப் பயணம் செய்யக் கூடிய நிலமையில் பெட்டிகள் காணப்பட்டு வந்தன.

ஆனால் தற்போது யன்னல்கள் மூடமுடியாத பெட்டிகளும், பலவகையான இருப்பிடங்களும் மின்விசிறி மின் வெளிச்சம் இல்லாமலும், மலசல கூடத்தில் நீரின்றியும் காணப்படுகின்றன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காணிப்பதிவு அலுவலகம் இடம்மாற நடவடிக்கை

(சுதுமலை)

யாழ்ப்பாணம் மாவட்ட காணிப்பகுதி அலுவலகம் மீண்டும் இடம்மாற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அடுத்த வாரம் முதல் இவ்வீடமைப்பு திணைக்கள கட்டடத்தில் செயற்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற கட்டடத்தில் இயங்கி வந்த இவ் வலுவலகம் கோட்டை இராணுவ ஷெல் தாக்குதல்களையடுத்து சேதமடைந்தது.

இதனால் யாழ்ப்பாணம் பழைய கச்சேரி கட்டடத்தில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா-பாகிஸ்தான் அணுயுத்தம் இலங்கையையும் பாதிக்கும்

(கொழும்பு)

இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் ஓர் அணுவாயுத யுத்தம் நிகழுமேயானால் அதன் கதிர்வீச்சுத் தாக்கம் இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என இலங்கை அணு ஆராய்ச்சி நிலையத் தலைவர் கலாநிதி ஏ. ஆர். கெட் சிங்கா தெரிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை சுற்று நிருபம் தனிச் சிங்களத்தில்

(வல்வெட்டித்துறை)

பாடசாலைகளுக்கான வருடாந்த அறிக்கைத்திரட்டு தற்போது கல்வி அமைச்சினால் முற்று முழுதான சிங்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் தமிழீழ முஸ்லிங்களின் பாதுகாப்புக் கவசம்

''திருமலை மாவட்டத்தில் எரிக்கலம் காட்டுச்சேனை வெள்ளாள வேட்டை. கல்லாறு வானாறு ஆகிய முஸ்லிம் பகுதிகள் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தமிழ்ப் பேசும் முஸ்லிம்களை தமிழ் தேசிய இனத்தின் பிரிக்கமுடியாத அம்சமாக விடுதலைப் புலிகள் பின்னிப் பிணைந்து அரவணைத்துள்ளார்கள். இனவாதம் பேசும் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களையே ஏமாற்றி வருகின்றது. முஸ்லிம் காங்கிரஸ் பேசும் இனவாதம் முஸ்லிம்களுக்கு ஓர் சாபக்கேடாகும்''

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் மௌலவி சி.எம். நயினா முகம்மது அவர்கள் ஈழநாதத்திற்கு நேற்று முன்தினம் வழங்கிய பிரத்தியேக செவ்வியில் குறிப்பிட்டார்

மௌலவி நயினாமுகம்மது

அவர்மேலும் கூறியதாவது ''விடுதலைப் புலிகளுக்கு முஸ்லிம்கள் மிக சந்தேகத்தை

(6ஆம் பக்கம் பார்க்க)

## றோகண மனைவிக்கு ஆண் குழந்தை

(கொழும்பு)

ஜே. வி. பி. தலைவர் றோகண விஜயவீராவின் மனைவி சுமதி கடந்த மாதம் 24 ஆம் திகதி கொழும்பு ஆஸ்பத்திரியில் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். 2 கிலோ 900 கிராம் எடையுள்ள இக் குழந்தைக்கு சுப்பிள் என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இரண்டு பெண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாடு பூராகவும் நேற்று முதல் வாக்காளர் கணக்கெடுப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் இவ்வாண்டுக்கான வாக்காளர் பட்டியல் கணக்கெடுப்பு வேலைகள் நேற்று முதலாம்திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது,

இரண்டு வாரங்களில் இந்த வேலைகள் முடிவடையும் என தேர்தல் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டம் உட்பட [illegible] ய தமிழ்ப் பகுதிகளில் 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த வாக்காளர் இடாப்புக்கள் பதியப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

வீடுகளில் தங்கியிருப்போர் வாக்காளராக பதியப்படுவதற்கு வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து கணக்கெடுப்பு அலுவலரிடம் ஒப்படைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

1990 ஜூன் 1ஆம் திகதிக்கு பின்பு பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்கள் தமது பிறப்பு சாட்சி பத்திரங்களையும் அடையாள அட்டையை

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**SPOKEN ENGLISH ADVANCED /TOEFL** மாசி மாதம் (Feb 90) ஆரம்பித்துப் பின் இடைநிறுத்தம் செய்யப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் நேரடியாகத் தொடர்புகொள்க. நேரம் காலை8–10மணிவரை. மாலை 4-6 மணி வரை S.B.IYAR 12 (3ம்) வைமன் வீதி, நல்லூர். (R–319)

## விற்பனைக்கு

### காணி விற்பனைக்கு

நல்லூர் வடக்கு கலைமகள் வீதியில் நல்ல சுற்றாடலில்சுற்றுமதிலுடனும்நல்ல தண்ணீர் வசதியுடனும் வீடு கட்டக்கூடிய காணிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: எம். எஸ். மாசிலாமணி கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு கல்வியங்காடு(R-320)


## மல்லாவியில் பாய் பின்னும் தொழிற்சாலை

(யாழ்ப்பாணம்)

பன் புல்லிலிருந்து பாய் பின்னும் தொழிற்சாலை ஒன்று மல்லாவியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இத்தொழிற்சாலை மூலம் யாழ் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பன்புல்லைக் கொண்டு கைவினைப் பொருட்களும் பலகையான பாய்களும் செய்யப்பட உள்ளது என யாழ்ப்பாண கைத்தொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரித்தார்.

இப்பன்புல் தொழிற்சாலை திறப்பு விழாவின்போது துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் திரு.கே. கிருஷ்ணபிள்ளையும் மல்லாவி பகுதி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பொறுப்பாளர் கிர்பாணியும் சமுகமளிததிருந்தனர் எனவும் அவ்வதிகாரி தெரிவித்தார். (லோ)

## பா ஓதல் போட்டியில் முதலாம் இடம்



(கொழும்புத்துறை)

யாழ். இந்து மகளிர்கல்லூரியில் நடைபெற்ற கோட்ட மட்டத்திலுள்ள தமிழ்த்தினப் போட்டியில் யாழ்.கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மாணவன் செல்வன் ம. பிரபாகரன் பா ஓதல் போட்டியில் முதலாம் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று மாவட்டப்போட்டிக்குத்தெரிவாகியுள்ளார்.

இவர் கொழும்புத்துறை கிழக்கைச்சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மரியதாஸ், தேவ அருள் தம்பதிகளின் புதல்வராவார்.

இவ் வித்தியாலய அதிபர் திரு. க. தங்கராசா செல்வன் ம. பிரபாகரனை வெகுவாகப் பாராட்டியுள்ளார். (24)

## கலைவிழா

(வடமராட்சி)

பொலிகண்டி அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் வித்தியாலயத்தின் கலைவிழா அண்மையில் வித்தியாலய அதிபர் திரு க. இராசதுரை தலைமையில் வெகுசிறப்பாகநடைபெற்றது.

பிரதம விருந்தினராக முன்னால் வித்தியாலய அதிபர் திரு. ஆ. பொன்னையா கலந்து கொண்டார்.

பாடசாலை மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் பழைய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாகநடைபெற்றன. (68)

# ஜனசக்தி உதவித்திட்டம் வவுனியாவில் சீரில்லை

(வவுனியா)

அரசின் ஜனசக்தி உதவி வழங்கும் திட்டம் வவுனியா மாவட்டத்திற்கு முற்று முழுதாகக் கொண்டுவரப் படவில்லை என்று மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

நெடுங்கேணி உதவிஅரசாங்க அதிபர்பிரிவில்சிலகிராமங்களிலும் சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சில கிராமங்களிலுமே இது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது.

இரணை இலுப்பைக்குளம், காக்கயன்குளம் போன்ற கிராமப் பகுதிகளுக்கு ,சில மாதங்களுக்கு முன்னர் மேற்படி உதவி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுதப்பட்டது.

அரசின் இந்த உதவித்திட்டத்தை எதிர் நோக்கிய வண்ணம் வவுனியா மாவட்ட மக்கள் காத்திருக்கின்றனர் அரசு இதில் அக்கறை கொள்வதாகத தெரியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் வவுனியா பின்தங்கிய மாவட்டம் என்பதும் இங்கு வாழும் மக்களில் பலர் விவசாயத்தை நம்பியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (தி)


சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ)

## சில்லறைப் பண்டகசாலை முகாமையாளர் பதவி

(சமயாசமயம்)

மேற்படி வெற்றிடத்துக்கான விளம்பரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ''தலைவர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்'' என விலாசமிடப்பட்டு இடதுபக்கமேல் பகுதியில் சில்லறைப் பண்டகசாலை முகாமையாளர் பதவிக்கான (சமயாசமயம்) விண்ணப்பம் எனக் குறிப்பிடப்பட்டு அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி 16-06-90.

விண்ணப்பதாரர் கீழே காணும் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தேவையான தகைமைகள்:-

கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான இரண்டு வருட அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளா (சாதாரணதர) பத்திரம்/ க. பொ. த சாதாரணதரத்தில் 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூய கணிதம் / சிங்கள / தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கியதான 6 பாடங்களிலான சித்தி.


வேலை செய்யும் நாளொன்றிற்கு ரூபா 50/- வீதம் வேதனம் வழங்கப்படும்.

பொது முகாமையாளர்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(B/1061)


## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி



கைதடி வடக்கு சிவபவனத்தைச் சேர்ந்தவரும் யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியில் கடமையாற்றும் திரு. ஆ. சி. சுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வியுமாகிய ரேணுகா சுப்பிரமணியம் அவர்கள், 1989 ஆம் ஆண்டு அகில இலங்கை 5 ஆம் ஆண்டு மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து கல்வி அமைச்சின் பணிப்பின்பேரில் யாழ். வேம்படி மகளிர் உயர் கல்லூரியில் படித்து சீலம் பெற வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இவர் ஆரம்பக் கல்வியை யாழ். புனிதயோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் கற்றுத் தேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களுக்கு சிவபுராணம்

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலம் மாணவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அருகில் உள்ள மன்றுளாடும் பிள்ளையார் கோவிலில் சிவபுராணம் படிப்பதென தீர்மானிக்கப்பட்டு சென்ற வெள்ளிக்கிழமையில் இருந்து ஏராளமான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மேற்படி பிராத்தனையில் ஈடுபட்டனர். (43)

## 5000 ரூபா பிற் பொக்கட்

கல்லாற்றிலிருந்து கொழும்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவரிடம் செலுத்துவதற்காக கொண்டு சென்ற ரொக்கத்தில் ரூபா ஐயாயிரத்தை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து பம்பலப்பிட்டி செல்லும் போது கல்லாற்றைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மினிபஸ்ஸில் பிற் பொக்கட்காரரிடம் பறிகொடுத்த பரிதாபசம்பவம் அண்மையில் நடைபெற்றது. (45)

## வெல்லாவெளி நடமாடும் செயலகம்

மட்டக்களப்பு வெல்லாவெளி உதவி அரச அதிபர் பிரிவில் எதிர்வரும் 2ஆம்திகதி நடைபெறவிருந்த நடமாடும் செயலகம் எதிர்வரும் 16ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 8ஆம், 9ஆம், திகதிகளில் மட்டக்களப்பில் வட–கிழக்கு அரச அதிபர்கள் கூட்டமும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் கூட்டமும் நடைபெற விருப்பதே இதற்கு காரணம் என்றும் அவர் கூறினார். (37)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு 1990-06-30 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

தாவரவியலில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11

சிரேட்ட உதவி நூலகர்/ உதவி நூலகர் தரம் 1/ உதவி நூலகர் தரம் 11

சம்பள அளவுத்திட்டம்:

சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேட்ட உதவி நூலகர். : ரூபா 9,600-8×250—11,600/- மாதமொன்றுக்கு

சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11/உதவி நூலகர் தரம் 1. : ரூபா 8,000—5×250—9,250/- மாதமொன்றுக்கு

உதவி நூலகர் தரம் 11: ரூபா 3,900 மாதமொன்றுக்கு (நிலையானது)

### வின்ஸர்-யாழ்

தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

### நியூ சாந்தி (யாழ்)

தினசரி 4.15, 6.15 8.00 9.30
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00 8-00 9-30
Sungpa & Alanyen Naiyenna. Yuchein in
**THE KILLER ELEPHANTS**
(Cinemascope Colour)

### லிடோ (யாழ்)

தினசரி 4-00, 6-30, 9–30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10–30, 2-30, 6-30, 9-3
(Fantastic Film, Suitable for Childrens)
**CRAZY JUNGLE ADVENTURES**
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

### வெலிங்டன் (யாழ்)

4-00 7-00 9-30
**A NIGHT ON THE TOWN**
8 ஆம் திகதி முதல் ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசுவின்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

### மனோகரா - (யாழ்)

தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2–30. 6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா

# விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி! BASF

மேற்கு ஜெர்மனியின் BASF நிறுவனத்தினரின்

விவசாய இரசாயனங்கள்

லைப்புலிகள் மக்கள் முன்
னணி பொறுப்பாளர் கிர்பா
ணியும் சமுகமளித்திருந்தனர்
எனவும் அவ்வதிகாரி தெரி
வித்தார். (லோ)

பாடசாலை மாணவ மாண
விகளின் கலை நிகழ்ச்சிகளும்
பழைய மாணவர்களின் கலை
நிகழ்ச்சிகளும் சிறப்பாகநடை
பெற்றன. (68)

பொது முகாமையாளர்
சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(B/1061)

ளிக்கிழமையில் இருந்து ஏரா
ளமான மாணவர்கள் மற்றும்
ஆசிரியர்கள் மேற்படி பிராத்
தனையில் ஈடுபட்டனர். (43


# விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி! BASF

## மேற்கு ஜெர்மனியின் BASF நிறுவனத்தினரின்
## விவசாய இரசாயனங்கள்

தற்போது வடபகுதியெங்கும்
அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
வெங்காய பயிரைத் தாக்கும் நுனி கருகல்,
தண்டு வெளிறல் ஊதா கொப்புளநோய்,
தண்டு அழுகல் போன்ற நோய்களை முற்
றிலும் கட்டுப்படுத்த

## பொலிராம் M பாவியுங்கள்.




தற்பொழுது
வெங்காய செய்கையாளர்களால்
விரும்பிப் பாவிக்கப்படும் ஓர் பூச்சிநாசினி

## பேர்fவெக்தியோன்

வெங்காயச் செய்கையில் செலவைக் குறைத்து விளைச்சலை அதிகரிக்க
பேர்fவெக்தியோன் பூச்சிநாசினியை உபயோகியுங்கள்.

FINCHEM AGRO DIVISION

**BASF** உற்பத்திகளை "பின்கெம்" (FINCHEM) வழங்குகின்றது. சகல விவசாய இரசாயன வியாபாரிகளிடமும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ்
(பிரவேட்) லிமிட்டெட்.**

186, வக்சோல் வீதி, கொழும்பு - 2

(பீடை நாசினிகள் அபாயகரமானவை அவதானமாக பாவியுங்கள்.) B-1019


விரிவுரையாளர் தரம் 1/
சிரேட்ட விரிவுரையா
ளர் தரம் 11
சிரேட்ட உதவி நூலகர்/
உதவி நூலகர் தரம் 1/
உதவி நூலகர் தரம் 11

**சம்பள அளவுத்திட்டம்:**

சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேட்ட உதவி நூலகர். : ரூபா 9,600-8×250—11,600/- மாதமொன்றுக்கு

சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11/உதவி நூலகர் தரம் 1. : ரூபா 8,000—5×250—9,250/- மாதமொன்றுக்கு

உதவி நூலகர் தரம் 11: ரூபா 3,900 மாதமொன்றுக்கு (நிலையானது)

ஒரு வருடத்திற்கு மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களும் விவரங்களும் இப் பல்கலைக் கழகத்தின் சிரேட்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்குரிய விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 23×10 ச.மீ. அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

குறிப்பு:

ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

★ உதவி நூலகர் தரம் 11 நியமனத்தின் போது பௌதீக விஞ்ஞானத்தில் (கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல்) 1 ஆம் வகுப்பு, 2 ஆம் வகுப்பு (மேல்தரம்) த்துடன் புள்ளிவிபரவியல், கணனி நிகழ்ச்சி முறையில் அறிவுள்ளவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(B/1054)


சம்சாரம் அது மின்சாரம்
(கலர்)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி, ஞாயிறு
10-30, 2-30,
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா
நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக
வெற்றிநடை போடுகிறது.

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
சனி, ஞாயிறு நாட்களில்
10 30, 2 30, 630, 9 30
விஜயகாந், ரேகா,
செந்தில்
நடித்த
**சொல்வதெல்லாம் உண்மை**
B 878

**ஸ்ரீதர் - (யாழ்.)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30
ரஜனி,ராதிகா,ரகுவரன்
நடித்த
**ஊர்க்காவலன்**
50-வது நாளை நோக்கி

**ராஜா (யாழ்)**
தினசரி 4·00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி,
கார்த்திக்
நடித்த
**மௌனராகம்**

# A/L அசேதன இரசாயனம்

## S,p,d தோகுப்பு மூலகங்கள்

## தொடர் - 2

**சத்தீஸ்**

### குளோரைட்டுக்களின அமைப்பு, இயல்பு என்பவற்றின் ஆவர்த்தனப் போக்கு

ஆவர்த்தனம் 2 அட்டவணை 1

| மூலகம் | Li | Be | B | C | N | O | F |
|---|---|---|---|---|---|---|---|
| சூத்திரம் | LiCl | $BeCl_2$ | $BCl_3$ | $CCl_4$ | $NCl_3$ | $OCl_2$ ($Cl_2O_7$) | FCl |
| நிலை/20°C | S | S | g | l | l | g | g |
| கொதிநிலை/°C | 1350 | 487 | 12 | 77 | 71 | 2 | −101 |

ஆவர்த்தனம் 3 அட்டவணை 2

| மூலகம் | Na | Mg | Al | Si | P | S | Cl |
|---|---|---|---|---|---|---|---|
| சூத்திரம் | NaCl | $MgCl_2$ | $Al_2Cl_6$ | $SiCl_4$ | $PCl_3$ ($PCl_5$) | $SCl_2$ ($S_2Cl_2$) | $Cl_2$ |
| நிலை/20°C | S | S | S | l (s) | l (s) | l (l) | (g) |
| கொதிநிலை/°C | 1465 | 1418 | 423 | 57 | 74 (164) | 59 (138) | −35 |

குறிப்பு (1)

(a) மேலே தரப்பட்ட ஒவ்வொரு மூலகத்தினதும் குளோரையிட்டில் மூலகத்தின் ஒட்சியேற்றல் எண் என்ன?
2-ம், 3-ம் ஆவர்த்தனங்களில் மூலகங்களின் ஒட்சியேற்றல் எண்கள் எவ்வாறு மாற்றம் அடைகின்றன?

(b) 2-ம், 3-ம் ஆவர்த்தனங்களில் மூலக குளோறைட்டுக்களின் ஆவிபறக்கும் தன்மை எவ்வாறு மாற்றம் அடைகின்றது?

(c) ஆவர்த்தனங்களின் வழி குளோறைட்டுக்களின் அமைப்பு அயன் இராட்சத பளிங்கில் இருந்து தனி மூலக்கூறாக மாறுகின்றது.
2-ம், 3-ம் ஆவர்த்தனங்களில் எச்குளோரையிட்டுக்கள் இராட்சத அமைப்பை கொண்டிருக்கும்? எவை தனி மூலக்கூறுகளாக இருக்கும்?

(d) 2-ம் ஆவர்த்தன மூலகங்களின் குளோறைட்டுக்கள் நீரை எவ்வாறு தாக்கும்.

### 2ம், 3ம் ஆவர்த்தனக் குளோரைட்டுக்களின் தயாரிப்பு

3-ம் ஆவர்த்தனத்தில் உள்ள மூலகங்கள் எல்லாம் நேரடியாகக் குளோரீனைத் தாக்கி குளோறையிட்டுக்களை கொடுக்கும். இங்கு சூடான உலோகத்தின் மேல் உலர் $Cl_2$ செலுத்தப்படும்.

உ+ம்:

$$Mg + Cl_2 \xrightarrow{\Delta H} MgCl_2$$

$$2Al + 3Cl_2 \xrightarrow{\Delta H} Al_2Cl_6$$

$$2P + 5Cl_2 \xrightarrow{\Delta H} P_2Cl_{10}$$

2-ம் ஆவர்த்தனத்தில் C,N,O, என்பன $Cl_2$ உடன் நேரடியாகத் தாக்காது ஏனையவை சூடான நிலையில் உலர் $Cl_2$ ஐத் தாக்கி குளோரைட்டுக்களைக் கொடுக்கும்.

N.B, (i) பொதுவாக உலோக குளோரைட்டுக்களைத் தயாரிக்குப் போது சூடான உலோசம் உலர் $Cl_2$ அல்லது உலர் HCl உடன் வெப்பமாக்கப்படும்.


(il) உலோகம் மாறுபட்ட வலுவளவைக் காட்டுமாயின் தாழ்ந்த குளோரைட்டைத் தயாரிக்க உலர் HCl பயன்படுத்தப்படும். உயர் குளோரையிட்டைத் தயாரிக்க உலர் $Cl_2$ பயன்படுத்தப்படும்.

# இரசாயன ஆயுதங்களைக் குறைக்க அமெரிக்கா - சோவியத் இணக்கம்

## புஷ் - கோர்பசேவ் உடன்படிக்கையில் கைச்சாத்து

(வாஷிங்டன்)

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை சந்திததுப் பேச்சுவார்த்தை நடத்த வியாழனன்று வாஷிங்டன் போய்ச் சேர்ந்திருக்கின்றார்.



இப்பேச்சுவார்த்தை நான்கு நாட்கள் நடைபெறும். இரு ஜனாதிபதிகளுக்கும் இடையே நடக்கும் இரண்டாவது மேன்நிலைப் பேச்சுவார்த்தை இதுவாகும்.

அதிகாரபூர்வமான வரவேற்பின பின்னர் இரு ஜனாதிபதிகளும் முதலில் சனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசினார்கள்,

முதல்கட்ட பேச்சுவார்த்தைகள் முடிந்ததும் பத்திரிகையாளர்களைச் சந்தித்த இரு ஜனாதிபதிசளும் தமது பேச்சுக்கள் நேச முறையிலும் நிதானமான முறையிலும் நடந்ததாகத் தெரிவித்தனர்.

இரசாயன ஆயுதங்கள் உற்பத்தியை நிறுத்தவது சம்பந்தமான உடன்படிக்கையில் நேற்று கையெழுத்திட்டனர்.

அத்துடன் வேறு சில உடன்படிக்கைகளிலும் கையெழுத்திடுவார்களென வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**ஜேர்மன் பற்றி முரண்பாடு**

மேலும் ஒன்றுபட்ட ஜேர்மனி நேட்டோ அணியில் சேர்வதா அல்லது வார்சோ அணியில் சேர்வதா என்பது பற்றிய பேச்சு இழுபறி நிலையில் உள்ளதாகவும் வெள்ளை மளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவிற்கு வருவதற்கு முன்னர் கனடாவிற்கு விஜயம் செய்த சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் இணைந்தஜேர்மனி நேட்டோ அணியில் தான் சேரவேண்டும் என்று மேற்குலக நாடுகள் கருதும் எண்ணத்தை ஏற்க இயலாது என்று கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதி இப் பேச்சு வார்தை பற்றி கருத்துத் தெரிவிக்கையில் இரு வல்லரசுகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் தொடர்ந்து நீடிப்பதன் அவசியம் பற்றி வலியுறுத்தினார்.

**பேச்சு வார்த்தையில் இடம்பெறும் கருத்துக்கள்**

இப் பேச்சு வார்த்தையில் முககியமாக அணுவாயுதக் கட்டுப்பாடு, ஐரோப்பிய பிராந்திய போர முறைக்குறைப்பு ஜேர்மனி இணைப்பு அது தொடர்பான பிரச்சினைகள், அமெரிக்க சோவியத் வர்த்தக உறவுகள், பால்டிக் நெருக்கடி, ஆர்மேனியப் பிரச்சினை போன்றவை பற்றி ஆராயப் பட்டு ஒரு முடிவுக்கு வரப்படும் என்று கூறப்படுகிறது.



இதேவேளை இப்பேச்சு வார்த்தைகள் முடிவுற்றதும் தென்கொரியாவின் ஜனாதிபதி, கொர்பசேவை சான் பிரான்ஸிஸ்கோவில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்துவார் என அறிவிக்கபட்டிருக்கிறது.

# இரகசியத் தகவல்களை சோவியத் வெளியிடவில்லை

## சண்டே ரைம்ஸ் செய்திக்கு மறுப்பு

(லண்டன்)

பாகிஸ்தானுடன் யுத்தத்திற்கு இந்தியா தயாராகி வருகிறது என்ற இரகசிய செய்திகளை அமெரிக்காவுக்கு ருஷ்யா வழங்கியதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் தகவல் வெளியிட்டது.

இதனை சோவியத் வெளிநாட்டு அமைச்சின் தகவல் பிரிவு அதிகாரி பாபிலேயே நிராகரித்துள்ளார்.

இப்படியான எந்தவொரு நடவடிக்கையும் மாஸ்கோ மேற்கொள்ளவில்லை என்று இங்கு நடைபெற்ற வெளிநாட்டு பத்திரிகையாளர் சந்திப்பின்போது அவர் தெரிவித்தார்.

சண்டே டைம்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் அணுவாயுதங்களை யுத்தத்திற்குப் பாவிக்கவும் இந்தியா தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெளிநாட்டுக் கொள்கையில் சோவியத் புதிய அணுகுமுறை

(மாஸ்கோ)

எதிர்வரும் 5 வருடங்ளிலும் சோவியத் வெளிநாட்டுக் கொள்கையில் மேலும் பல சீர்திருத்தங்கள் ஏற்படக்கூடும் என ஹேஸ்யம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உச்சி மகாநாடு இடம் பெறும் இந்நோக்கில் கிரெம்...

பாரிய தீங்கை விளைவிக்கக் கூடிய ஆயுதங்களை முற்று முழுதாக ஒழிக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரமாக வாழ உரிமை வழங்குவது என்பன புதிய அரசியல் சிந்தனையின் மற்றுமொரு அம்சமாகும்.

# பேருவில் பூமியதிர்ச்சி 200 பேர் பலி

(லீமா்)

பேருவில் இடம்பெற்ற பூமி அதிர்ச்சி சம்பவம் ஒன்றில் 200 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் இச்சம்பவத்தில் 800 பேரைக் காணவில்லை இவர்கள் இறந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

பேரு அமேஸன் காட்டு பகுதிக்குச் சமீபமாக இப்பூமியதிர்ச்சி கடந்த புதனன்று இடம்பெற்றது.

பாதிப்புற்ற மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு விமானப் படைகள பணியில் ஈடுபட்டுள்ளன. அத்துடன் விமானங்களின்மூலம் உணவுப் பொட்டலங்கள் அனுப்பப்பட்டுள்ளன 126 தொன் உணவு மற்றும் மருந்து வகைகள் போன்றவைகள் என்பன விமானங்கள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன.

## சீனாவில் 11 பேருக்கு தூக்குத் தண்டனை

(பீக்கிங்)

## வீடமைப்பு உதவி

## 2, 3-ம் ஆவர்த்தனத்திலுள்ள குளோரைட்டுக்களின் தயாரிப்பு

3-ம் ஆவர்த்தனத்தில் உள்ள மூலகங்கள் எல்லாம் நேரடியாகக் குளோரீனைத் தாக்கி குளோறையிட்டுக்களை கொடுக்கும். இங்கு சூடான உலோகத்தின் மேல் உலர் $Cl_2$ செலுத்தப்படும்.

உ+ம்:

$$Mg + Cl_2 \xrightarrow{\Delta H} MgCl_2$$

$$2Al + 3Cl_2 \xrightarrow{\Delta H} Al_2Cl_6$$

$$2P + 5Cl_2 \xrightarrow{\Delta H} P_2Cl_{10}$$

2-ம் ஆவர்த்தனத்தில் C,N,O, என்பன $Cl_2$ உடன் நேரடியாகத் தாக்காது ஏனையவை சூடான நிலையில் உலர் $Cl_2$ ஐத் தாக்கி குளோரைட்டுக்களைக் கொடுக்கும்.

N.B, (i) பொதுவாக உலோக குளோரைட்டுக்களைத் தயாரிக்கும் போது சூடான உலோகம் உலர் $Cl_2$ அல்லது உலர் HCl உடன் வெப்பமாக்கப்படும்.

(ii) உலோகம் மாறுபட்ட வலுவளவைக் காட்டுமாயின் தாழ்ந்த குளோரைட்டைத் தயாரிக்க உலர் HCl பயன்படுத்தப்படும். உயர் குளோரையிட்டைத் தயாரிக்க உலர் $Cl_2$ பயன்படுத்தப்படும்.

$$Fe + 2HCl \xrightarrow{\text{உலர்நிலை} / \Delta H} FeCl_2 + H_2$$


$$2Fe + 3Cl_2 \xrightarrow{\text{உலர்நிலை} / \Delta H} 2FeCl_3$$

உலோக- அலோகக் குளோரைட்டுக்களின் பொதுத் தயாரிப்புக்களும் அவற்றுக்கான காரணங்கள் பற்றியும் பின்னர் கருதப்படும்

உதாரணம்: I

ஆய்வு கூடத்தில் 3-ம் ஆவர்த்தனத்தில் உள்ள மூலகங்களின் உலர் குளோரைட்டுக்களைத் தயாரிப்பதற்கு கீழ் காட்டப்பட்டிருக்கும் உபகரணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இங்கு X குளோரைட்டாக மாற்றப்பட வேண்டிய மூலகம். U ($100cm^3$) உலர் குளோரைட்டைச் சேகரிக்கும் இரு கழுத்துக் குழாய், T என்பது 1·5cm விட்டம் 30cm நீளமுள்ள தகனக் குழாய் ஆகும்.




(விடை அளிப்பதற்கு அட்டவணை 2 ஐப் பயன்படுத்துக)

அ. (i) குழாய் V என்னத்தால் நிரப்பப்பட வேண்டும்?
(ii) இது பயன்படுத்தியதன் காரணம் என்ன?
(iii) பயன்படுத்தாவிடின் என்ன பாதிப்பு ஏற்படும்?
(iv) இப்பாதிப்பை முற்றாகத் தடுப்பதற்கு மேலும் என்ன வழியைக் கையாழுவீர்?

ஆ. பன்சன் சுடர் அடுப்பை பயன்படுத்தியதற்கான இரு முக்கிய காரணங்களைத் தருக.

இ. சில மூலகங்களின் குளோரைட்டுக்களுடன், அவற்றின் ஒட்சைட்டுக்களும் மாசாகச் சேகரிக்கப்படுவதை தடுப்பதற்கு தொடக்கத்தில் உபகரணத்திற்கு ஊடாக சடத்துவ வாயு செலுத்தப்பட்டு, உபகரணம் சடத்துவ வாயுவினால் நிரப்பப்படும். மேல் கூறிய எம் மூலக குளோரைட்டுகளைத் தயாரிக்கும்போது இச் செய்முறை மிகவும் அவசியமாகும்? ஏன்?

விடை

அ. (1) NaOH (aq) (செறிந்த) (2) $Cl_2$ ஐ உறிஞ்சுவதற்கு.
(3) $Cl_2$ ஆய்வு கூடத்தினுள் பரவும்.
(4) இது போன்ற NaOH குழாய்களைத் தொடரில் இணைத்தல்.

ஆ. (i) மூலகம் / $Cl_2$ தாக்கத்தை தொடங்குவதற்கான ஏவற்ச்க்தியை கொடுத்தல்.
(ii) விளைவாகும் உலோகக் குளோரைட்டு தகனக் குழாயினுள் ஒடுங்காது தடுப்பதற்கு.

இ. P, S காரணம் $P_2O_5$, $SO_2$ என்பன ஆவிப்பறப்புள்ளவை. எனவே குளோரைட்டுடன் மாசாகச் சேகரிக்கப்படலாம்.
($MgO$, $Na_2O$, $Al_2O_3$, $SiO_2$ ஆவிப்பறப்பற்றவை. இவை தோன்றினாலும் ஆவியாகி குளோரைட்டுடன் கலக்கமாட்டாது)

(தொடரும்)

இதனை சோவியத் வெளிநாட்டு அமைச்சின் தகவல் பிரிவு அதிகாரி பாபிலேயே நிராகரித்துள்ளார்.

யுதங்களை யுத்தத்திற்குப் பாவிக்கவும் இந்தியா தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெளிநாட்டுக் கொள்கையில் சோவியத் புதிய அணுகுமுறை

(மாஸ்கோ)

எதிர்வரும் 5 வருடங்ளிலும் சோவியத் வெளிநாட்டுக் கொள்கையில் மேலும் பல சீர்திருத்தங்கள் ஏற்படக் கூடும் என ஹேஸ்யம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உச்சி மகாநாடு இடம் பெறும் இந்நேரத்தில் கிரெம்ளின்னதும் வெள்ளைமாளிகையினதும் வெளியுறவுக் கொள்கைகள் மிகவும் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

சர்வதேச பந்தோபஸ்துக் குறித்து கிரெம்ளின் எடுக்கும் நடவடிக்கைகள் நிதானமான போக்கு உடையதாகவும் ஸ்திரத்தன்மை கொண்டதாகவும் உள்ளன என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

கிரெம்ளினின் புதிய அரசியல் சிந்தனையின் பிரகாரம் பாரிய தீங்கை விளைவிக்கக் கூடிய ஆயுதங்களை முற்று முழுதாக ஒழிக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரமாக வாழ உரிமை வழங்குவது என்பன புதிய அரசியல் சிந்தனையின் மற்றுமொரு அம்சமாகும்.

கொர்பசேவ் தலைமையிலான குழு வெளிநாட்டுக் கொள்கையில் மேற்கொள்ளும் சீர்திருத்தங்களைக் பெருவாரியான மக்கள் வரவேற்கின்றனர்.

வாஷிங்டன் நிர்வாகமும் தனது வெளிநாட்டுக் கொள்கையில் ஆக்கபூர்வமான மாற்றங்களைக் கொண்டுவருவதன் அவசியத்தை மாஸ்கோ தீர்மானங்கள் காட்டுவதாக உள்ளன.

# 200 பேர் பலி

(லீமா)

பேருவில் இடம்பெற்ற பூமி அதிர்ச்சி சம்பவம் ஒன்றில் 200 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் இச்சம்பவத்தில் 800 பேரைக் காணவில்லை இவர்கள் இறந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

பேரு அமேஸன் காட்டு பகுதிக்குச் சமீபமாக இப்பூமியதிர்ச்சி கடந்த புதனன்று இடம்பெற்றது.

பாதிப்புற்ற மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு விமானப் படைகள பணியில் ஈடுபட்டுள்ளன. அத்துடன் விமானங்களின்மூலம் உணவுப் பொட்டலங்கள் அனுப்பப்பட்டுள்ளன 126 தொன் உணவு மற்றும் மருந்து வகைகள் போன்றவைகள் என்பன விமானங்கள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன.

## சீனாவில் 11 பேருக்கு தூக்குத் தண்டனை

(பீக்கிங்)

சீனாவில் குற்றவாளிகள் எனக் கருதிய 11 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

கொலை கொள்ளைச் சம்பவங்கள் என்பன தொடர்பாகவே இவர்கள் கைதானவர்கள்.

சீனாவில் இடம்பெறவிருக்கும் ஆசிய விளையாட்டுக்களை முன்னிட்டு அங்கு குழப்பம் ஏதும் ஏற்படாத வகையில் இத் தண்டனைகள் வழங்கப்பட்டதாக குற்றவியல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வீடமைப்பு உதவி

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பகுதியில் கடந்த மாதம் பதினொரு லட்சத்து பன்னீராயிரம் ரூபா வீடமைப்பு நன்கொடையாக கொடுக்கப்பட்டது.

இவை தவணை அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுப்பனவு பட்டியலில் தவறவிட்டவர்களுக்கும் விரைவில் இப்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# உணவு முத்திரை குறித்து கல்வியமைச்சு சுற்றறிக்கை

(வவுனியா)

பாடசாலைப் பாடங்களில் குறுக்கீடு என்ற வடிவில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கிச் சகல பாடசாலைப் பிள்ளைகளுக்கும்சுத்தமானபோசனை உணவு இலவசமாக கிடைக்கும் நோக்கத்துடனேயே மாணவர் முத்திரை செயல் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு உயர்கல்வி அமைச்சு சகல மாகாண கல்விச் செயலாளர்களுக்கும் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதனுடன், வீண் விரயம், மோசடி, தவறான செயல், பணத்தைக் களவாடுதல் ஆகிய குறைபாடுகளை நீக்கும் நோக்குடன் இந்த மாணவர் முத்திரை செயல் திட்டம்மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணவர்கள் வீட்டில் தயாரித்துக் கொண்டுவரும் உணவுக்கு 3.00 ரூபா பெறுமதியான முத்திரை கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் பாடசாலைக்கு கொண்டுவரும் உணவின் எண்ணிக்கை அடிப்படையில் இம் முத்திரை பெறும் உரிமை நிர்ணயிக்கப்படும் என்றும் மாத முடிவிலேயே இது மாணவர்களுக்கு வழங்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூரில் உற்பத்தி செய்த தானியங்களைக் கொண்டு, உணவு தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்றும், இறக்குமதி செய்யப்படும்கோதுமை உணவு வகைகளுக்குக்கொடுப்பனவு செய்யப்படமாட்டாது என்றும், வீட்டில் சமைக்கும் உணவு வகைகளைக் கொண்டு வராத மாணவர்களுக்கு முத்திரை பெறும் உரிமை இல்லை என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது

ஒவ்வொரு மாவட்டங்களின் அரசாங்க அதிபரின் கீழ் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஊடாக அந்தந்தப் பகுதி பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்படும் முத்திரைகள், பாடசாலைகளில் அமைக்கப்பட உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மாணவர்களுக்கான உணவுப் பொருட்களின் விநியோகம் நடைபெறும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

## இணக்கசபை

(அரியாலை)

அரியாலை மத்தி. மேற்கு ஆகியகிராம சேவகர்கள்பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கான இணக்கசபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் கூட்டம் ஒன்று அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் ஒழுங்கு செய்யப்பட்டது.

பொதுமக்களில் இருந்து ஐவர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

ஏனைய ஐந்து அங்கத்தவர்களை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தெரிவு செய்தது. (1)

## ப.நோ. கூ. சங்கம் புதிய சேவை

(பருத்தித்துறை)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மக்களுக்கு போட்டோஸ்ரட் சேவைகள், றோணியோ சேவைகள், தட்டச்சு சேவைகளை ஆரம்பித்துள்ளதாகப் புலோலி ப. நோ கூ. சங்க இயக்குனர் சபைத் தலைவர் பொன். மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

இச்சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கென பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் போட்டோஸ்ரட் இயந்திரமொன்றையும் றோனியோ இயந்திரமொன்றையும் கொள்வனவு செய்துள்ளது.

அத்துடன் தட்டச்சு வேலைகளை மேற்கொள்வதற்கென தட்டெழுத்தாளர் ஒருவரையும் நியமித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## மருதானையில் சி.ஐ.டி என்று கூறி - கொள்ளை

சில தினங்களுக்கு முன் கொழும்பு மருதானையில் வைத்து தாம் சி. ஐ. டி என்றும் சாம் தம்பிமுத்து கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றோம் என்றும் கூறி மூன்று இளைஞர்கள் ஸ்ருடியோ ஊழியரை ஓட்டோவில் கடத்திக் கொண்டு போய் அவரிடம் காணப்பட்ட பணத்தையும், மற்றும் பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றனராம்.

# முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை மக்கள் முன்னணி பாதுகாக்கும்

(வவுனியா)

''முஸ்லிம் மக்களின் தனித்துவமான கலாசாரம், பண்பாடுகளை நாம் பேணிப் பாதுகாத்து வருகின்றோம். இவற்றை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பாதுகாத்து வரும் என்பது உறுதி'' என கடந்த 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியாவிலுள்ள காக்கையன் குளத்து முஸ்லிம் கிராமத்தில் நடைபெற்ற வன்னி மாவட்டங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வன்னிமாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும் பொழுது நாம் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவராக இருப்பினும் பேசுகின்ற மொழி ஒன்றாகும். சுயநல அரசியல் நோக்கம் கொண்ட அரசியல் கும்பலினால் ஏற்படுத்தப்பட்ட ஜிகாத் என்னும்பயங்கரவாதக் குழு தமிழ் முஸ்லிம் மக்களிடையே பிளவையேற்படுத்த முயல்கிறது. முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சுயநலத்திற்காகச் சொந்த இனத்தையழிக்க முற்படுகின்றது. நாம் பாகுபாடின்றி எமது மண்ணைப் பாதுகாக்க உழைத்து வருகின்றோம். இதற்கு சகல மக்களும் உதவ வேண்டும் என்றார்.

மௌலவி வி. எஸ். எஸ். அப்துல்காதர் பேசும்பொழுது முஸ்லிம்மக்களாகிய நாம் விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு இன, மத வேறுபாடின்றி ஒத்துழைப்போம் என்றார்.

ஜனாப் பாரூக் என்பவர் தமதுரையில் விடுதலைப் புலிகள் தமது கிராமத்தில் கால் வைத்ததன் காரணத்தால் எமது கிராமம் அழியாமல் இருக்கின்றது. இல்லாது போனால் ஸ்ரீ லங்கா இராணுவத்தினராலும், இந்திய இராணுவப் படையினராலும் முழுக்கமுழுக்க அழிக்கப்பட்டிருக்கும் என்றார். வவுனியா காக்கையன் கிராமம் முழுக்கமுழுக்க ஓர் முஸ்லிம் கிராமம் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## கோட்டங்களுக்கு இடையில் புதிர்ப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட புதிர்ப் போட்டிகள் நிதர்சனம் தொலைக்காட்சி நிறுவனத்தினாலும், விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினாலும் இணைந்து ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. இப் போட்டிகள் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க ஸ்தாபகர் மேஜர் முரளியின் நினைவாக நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப் புதிர்ப் போட்டிகள் முதலாம் சுற்று கோட்டப்பிரிவுகளில் யாழ்.கோட்டம், மருதனா மடம் கோட்டம், பண்டத்தரிப்பு கோட்டம், வடமராட்சி கோட்டம் தீவுப்பகுதி கோட்டம் சாவகச்சேரிக் கோட்டம், என்பனவற்றிலிருந்து முறையே யாழ் மத்திய கல்லூரி, இராமநாதன் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, வேலணை சேர்.வை. துரைசாமி மத்திய மகா வித்தியாலயம் டிறிபேக் கல்லூரி ஆகியன கலந்து கொள்கின்றன.

இவ் அறிவுப் போட்டியில் அனைத்து மாணவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் வேண்டிக் கொள்கிறது.

## போராட்ட காலத்தில் கூட்டுறவு இயக்கம் அவசியம்

போராட்ட காலத்தில் கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் சேவையாற்ற வேண்டும். கூட்டுறவின் வளர்ச்சி மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. காலத்தின் தேவை கருதியும், மக்களின் நலன் கருதியும் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலையைத் தான் எமது மக்கள் விரும்புகிறார்கள், இந்த விடயத்தில் மக்களின் கருத்துக்களைக்கேட்டு அவர்களின் விருப்பப்படியே செயல்படுகின்றோம். எமது போராளிகளும், மக்களும் இரத்தம் சிந்தியதால் ஏற்பட்ட இந்த அமைதி நிலையை பயன்படுத்தி எந்த ஒரு தனிநபரோ பொது அமைப்போ எமது மக்களை சுரண்டி கொள்ளையடிப்பதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கமாட்டோம். எமது மக்களின் சுதந்திரத்திற்கு குறுக்கே நிற்கும் எந்த செயல்பாடுகளையும் நாம் அனுமதிக்கமாட்டோம்.

மேற்கண்டவாறு கடந்த செவ்வாய்க்கிழமை வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுச்சபை உறுப்பினர்களுக்கிடையே நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி தீவக அரசியல் முக்கியஸ்தர் திரு. நரேஸ் கூறினார். சங்க மண்டபத்தில் இயக்குநர் சபைத் தலைவர் திரு. பொ. நடராசா தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. சங்க பொதுமுகாமையாளர் திரு. வே. செல்லத்துரை உட்பட பலர் உரையாற்றினர்.

## மறைந்த முன்னாள் மேயருக்கு மட்டக்களப்பில் அஞ்சலி

(மட்டக்களப்பு)

காலஞ்சென்ற மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் மேயர் இரா. அம்பலவாணரின்(60 வயது)பூதவுடல் அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தநேரம் விடுதலை புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் எஸ்.கரிகாலன் உட்பட சமூக, சமய, அரசியல் ரமுகர்கள் பலரும்தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த சனிக்கிழமை மாலை ஆலையடிச் சோலை மயானத்தில் நடைபெற்றது.

அவரதுபுதல்வன் அ.யோகக்குமார்சிதைக்கு தீமூட்டினார்.

அவரது இல்லத்தில் இருந்து பூதவுடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படமுன்பு மாநகரசபை மண்டபத்தில் 15 நிமிடங்கள்அஞ்சலிக்ககாவைக்கப்பட்டிருந்தது.

மாநகரசபை ஆணையாளர் திரு.கே.கார்த்திகேசுவும்ஊழியர்களும் பூதவுடல் பேழையை பொறுப்பேற்றனர். (37)


உங்கள் அன்றாட தேவைகளுக்கான

பலசரக்கு சாமான்கள்
நெஸ்லே பால்மா வகைகள்
பன்சி குட்ஸ்
குளிர் பானங்கள்
பிளாஸ்டிக் பொருட்கள்
கால்நடைத்தீனிகள்

அனைத்தும் மலிவு விலையில் எம்மிடம்கிடைக்கும்.

"லிங்கம் ஸ்ரோர்"
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

(B-1056)



வாடிக்கையாளர்களே...
ஒப்பந்தக் காரர்களே...

உங்கள் கட்டிடங்களுக்குத் தேவையான

நிலை - கதவு - ஜன்னல்
மற்றும்
கூரை வேலைகள் அனைத்திற்கும்...
உங்கள் இல்லத்தை அலங்கரிக்க
நவ நவீன தளபாடங்களான
குஷன்... செற்றிகள்...
மேசை, கதிரை, அலுமாரி, ஷோக்கேஸ்
அனைத்திற்கும்...



அமரத்துவம் எய்திய

## ஓராண்டு நினைவு நாள்



## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சி இரண்டாவது பொறுப்பாளரும் வடமராட்சி அரசியல் பொறுப்பாளருமான



வீரவேங்கை

**மேஜர் சலாம் (பழம்) அவர்கள்**

(வ. சி. நல்லராசன் - இமையாணன்)

தமிழ்த்தாய் தாங்கலில்:- 17-09-1956



**திரு. எஸ். ஆர். கனகநாயகம்**

(Advocate) அவர்கள்

தோற்றம்: 11-05 - 1904 மறைவு: 15- 05 -1989

திதி : 02 - 06 - 1990

எமது சபையின் தலைவராக இருந்து சேர் பொன் இராம நாதன் அவர்களின் இலட்சியங்களை முன் வைத்துஆற்றிய அரும்பெரும் சேவைகளை நினைவு கூருகின்றோம்.

(R .318) பரமேஸ்வராக் கல்லூரி இயக்குனர் சபை.

---

வாடிக்கையாளர்களே...
ஒப்பந்தக் காரர்களே...

**உங்கள் கட்டிடங்களுக்குத் தேவையான**

நிலை - கதவு - ஜன்னல்
மற்றும்
கூரை வேலைகள் அனைத்திற்கும்...

- உங்கள் இல்லத்தை அலங்கரிக்க
- நவ நவீன தளபாடங்களான
- குஷன்... செற்றிகள்...
- மேசை, கதிரை, அலுமாரி, ஷோக்கேஸ்

அனைத்திற்கும்...


**நாடுங்கள்....**

## இணுவில் தச்சுத் தொழிலகம்

கே. கே. எஸ். வீதி, இணுவில்.

B/1057

---



வீரவேங்கை

## மேஜர் சலாம் (பழம்) அவர்கள்

(வ. சி. நல்லராசன் - இமையாணன்)

தமிழ்த்தாய் கரங்களில்:- 17-09-1956
தமிழர் தம் மனங்களில்:- 02-06-1988

நீ...
மானிடத்தை நேசித்த மனிதனாக...
தாய் மண்ணின் நாசங்கண்டு
சுதந்திர வேட்கை கொண்ட வீரனாக...
உறுதியுடன் உன் தடங்களை மண்ணில் பதித்தவன்
உன் தியாகங்கள்...
தமிழர் தம் மனதின் ஆறாத தீக்காயங்கள்...
சுதந்திர தமிழ் மண்ணின் நிரந்தர விடிவு நாளில்
எம்முகம் சிந்திடும் புன்னகை
உன் ஆத்மாவை அமைதி செய்யட்டும்
''விதையாக முன்னரே எருவான''
உன் தியாகம் ஈராண்டு மட்டுமா?
நம் நெஞ்சிருக்கும் வரை நிலைத்திருக்கும்.

தமிழ்வளர்சோலை - குடும்பத்தினர்.
இமையாணன்.
02-06-1990

R/323

---

## சுத்தம் சுகம் தரும்

உங்கள் உணவு வகைகள் தரமானதாக அமைய .....

சுத்தமான ..... **நாட்டரிசியை**

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.....
குற்றியும் கொள்ளலாம்.....

**தரம் 1 / தரம் 2 வகை அரிசியை**

நிதான விலையில்
தரமானதாகவே பெற்றுக்கொள்ள ....

# முருகன்
# அரிசி ஆலை

வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு,
இணுவில்.

(B-1055)

## சிந்தனைக்கு

இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலையவர்

- திருவள்ளுவர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 02 - 06 - 90
தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208
த. பெ. எண். 05

# வெங்காயம்...!

நாட்டில் இப்பொழுது வெங்காயத்துக்குப் பெரும் தட்டுப்பாடு. ஒரு கிலோ வெங்காயத்தின் விலை நூறு ரூபாய் வரை அதிகரித்தது.

வெங்காயத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு வெளிநாடுகளிலிருந்து அவசர அவசரமாக இறக்குமதி செய்யப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் வெங்காயம் அத்தனையும் நமது நாட்டு வெங்காயத்தின் தரத்துக்கு ஈடாக இருப்பதில்லை.

ஆனாலும் வெங்காயத் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக அரசாங்கம் வெவ்வேறு நாடுகளிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்கிறது.

வெங்காயத்துக்கு இவ்வளவு பெரும் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு என்ன காரணம்?

1970 ஆம் ஆண்டில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்ததும் அப்போது நிதி அமைச்சராக இருந்த டாக்டர் என். எம். பெரேரா வெளிநாட்டு இறக்குமதிகளை நிறுத்தினார்.

செத்தல் மிளகாய், பருப்பு, உழுந்து வெங்காயம் போன்ற உப உணவுப்பொருள்களின் இறக்குமதியும் தடை செய்யப்பட்டன. உப உணவுப் பொருள்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டுமென்று அரசு கூறியது. உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் வகையில் உத்தரவாத விலையும் அதிகரிக்கப்பட்டது.

நாடுமுழுவதுமே உணவுப்பொருள்களின் உற்பத்தியில் மக்கள் ஈடுபட்டனர்.

கடும் உழைப்புக்கு பெயர்பெற்ற வடபகுதிக் கமக்காரர்கள் உற்சாகத்துடன் உணவு தானிய உற்பத்தியிலீடுபட்டனர்.

வெங்காயம், செத்தல் மிளகாயில் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யமுடியுமென்பதை வடபகுதி விவசாயிகள் நிரூபித்துக் காட்டினர்.

தரிசாகக் கிடந்த நிலங்களெல்லாம் வெங்காயம், மிளகாய், உழுந்து, பயறு என்றும் குரக்கன், சாமை, எள்ளு என்றும் செய்கை பண்ணப்பட்டன. வீடுகளில் ஓர் அங்குலம் நிலம்கூட வெறுமையாகக் கிடக்கவில்லை. வீட்டுத்தோட்டங்களில் மரவள்ளியும் காய்கறிகளும் உற்பத்தி செய்யப்பட்டன.

# சொல் வேந்தன் — சொக்கன்

### அகில இலங்கைத் திருமுறை மன்றமும், யாழ். நாயன்மார்கட்டு வெய்யிலுகந்த விநாயகர் பண்ணிசை மன்றமும், யாழ். நாயன்மார் கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகமும் இணைந்து வெளியிடும் செய்தி

இன்று சொக்கன் அவர்களின் மணிவிழாவாம் மங்கல நாள். கிராமம் எங்கணும் விழாக்கோலம் கதிரவனும் தன் செங்கதிர்களை நீட்டி மக்களைத் துயிலெழுப்பித் தானும் விழாவினைக் காண்பான் விரும்பி நேரத்தோடு உதயஞ் செய்தான். துயிலெழுந்த மக்கள் வீதிகளையும் இல்லங்களையும் தங்களைகளையும் அலங்கரிக்கின்றனர். விழா நிகழ்ச்சியின் ஆரம்பமாக ஆலய வழிபாட்டில் மணிகள் ஒலிக்கின்றன. விழா நாயகனது ஆக்கங்களின் கண்காட்சி மண்டபம் கவினுற விளங்குகின்றது. ஊர்வல ஒழுங்குகள் கவனிக்கப் படுகின்றன.

விழா நாயகன் சொக்கன் அவர்களின் சீலம், நோன்பு, செறிவு, அறிவு, ஆற்றல், அநுபவங்கள், ஆக்கங்கள் குறித்துப் பேருரைகளும் ஆய்வுரைகளும் ஆசியுரைகளும் வாழ்த்துரைகளும் நிகழ்த்த நல்லை ஆதீன முதல்வர், வேதபாரகர்கள், தேவத்தானத் தலைவர்கள், பேராசிரியர்கள், பண்டித வித்வான்கள், வைத்திய கலாநிதிகள், தலைசிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்கள் இனனோரன்ன பேரறிஞர்கள் வருகை தந்து கொண்டிருக்கிறார்கள். எனினும் எம்மிடையே உதித்து வளர்ந்து தமது தளரா முயற்சியால் அருங்கலைகள் பயின்று புகழ் ஏணியின் உச்சியில் மிளிரும் சொல்வேந்தன் சொக்கன் அவர்கள் பிறந்த நாட்டின் பெருமையையும் ஒரு சேர ஒரு சேர உயர்த்தி நிற்கும் உத்தமர் என்பதனால் மணிவிழாக் குறித்து இறும்பூதெய்தும் நாமும் இப்பெரிய வரிடத்துக் காணும் நல்லனவற்றுள் ஒரு சிலவற்றையாவது எழுத வேண்டும் என்னும் உரிமையால் எழுதலுற்றோம். இவருடைய குணாதிசயங்களைக் குறித்துப் புகழ்வதற்கு எம் போலியரால் இயலாது. பாற்கடல் முழுவதையும் நக்கிக் குடிக்க விரும்பும் பூனையின் ஆசை போன்றதே எம்மை எழுதத் துண்டியது.

நாட்டின் நலத்தாற் பெரியோர்கள் தோன்றுவர் என்பர் பெரியோர். சொல்வேந்தன் சொக்கன் அவர்களின் நாடு எது? அதன் நலந்தான் யாது? வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கங் செந்தமிழுஞ் செந்திருவுஞ் சுந்தர நடஞ் செய நாயன்மார்கட்டு என்னும் நன்னாடாந் தமக்கேயுடைய

''காடாகொன்றோ நாடா-
கொனறோ
அவலகொன்றோ மிசையா-
கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்-
அவ்வழி
நல்லை நீ வாழிய நிலனே''

என்ற ஔவையார் கூற்று இந்நாட்டுக்கு முற்றிலும் பொருந்தும்.

தருமமும் நன்றிக் கடனும் மிகுந்தவர்கள் சென்ற ஆண்டு கார்த்திகைத் திங்கள் கொடை வள்ளலும் மூகறிஞரும் மலாயன் பென்சனருமான உயர் திரு இ நாகரத்தினம் அவர்களுக்கு நூற்றாண்டு விழா எடுத்து மிகச் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

இந்நாட்டின் நடுவே நன்மரம் பழுத்தாற் போன்று திகழ்பவரே சைவப் பேரறிஞன், திருமுறைக்காவலன், மதிநுட்பம் நிறைந்த மாண்பினன், சிவம் பெருக்குந் தொண்டன், நல்லாசிரியன், நாவலன் பாவலன் முதுபெரும் எழுத்தாளன் கலைமாணி தமிழ் மாமணி என்றெல்லாம் அடுக்கிக் கூறினாலும் அளவுபடாத பெருமையினையுடைய அறிஞர் திலகம் சொக்கன் அவர்கள். இவர் தலைவராகவோ பாதுகாவலராகவோ கௌரவ அங்கத்தவராகவோ அங்கத்தவராகவோ ஆலோ



சகராகவோ இல்லாத மன்றங்களே எம்மிடமேயில்லை. இம்மன்ற நிகழ்ச்சிகளில் தம்முடைய பெருமையையும் எம்முடைய சிறுமையையும் ஒப்ப நோக்காது பொன்னான நேரத்தையும் பொருட்படுத்தாது மன்றங்கள் அவ்வப் போது ஆற்றும் பணிகளில் கலந்து சிறப்பித்தும் வந்தது மாத்திரமன்றி எல்லாவற்றுக்கும் மேலாக மேற்படி மன்றங்கள் இணைந்து தொண்டாற்றிய சமயப் பிரசாரத் தொடர் நிகழ்வான பெரிய புராண, கந்தபுராண, திருவிளையாடற் புராணபடன ஆரம்ப வேளைகளிலும் நிறைவுவிழாக்களிலும் முன்னின்று ஆலோசனைகள் வழங்கியும் தலைமை தாங்கியும் சிறப்புச் சொற்பொழிவாற்றியும் பெருமைப்படுத்திய நன்றியைத் தெரிவிக்குமுகமாக எழுந்ததே இச் செய்தி.

விழா நாயகன் சொக்கன் அவர்களைத் தமிழுலகம் நன்கு அறியும். இவர் இயற்றுந் தமிழ்த் தொண்டினைப் போற்றுவோர் பலர். இவர் புலமையை புகழும் புலவர் பலர். இவர் நல்லுரை கேட்டு நயமுறுபவர் பலர். சொல் வேந்தன் என இவரைத் துதிப்பவர் பலர். இவர் வடிவும் அழகும் மனத்தைக் கவரவல்ல பருமையும் மெலிவுமின்றிப் பாங்குற அமைந்த உடல். விரிந்த கொள்கையிற் பரந்த நெற்றி. தமிழ்பூக்குந் தனிவாய், முகத்தை உற்றுநோக்கினால் அதில்தோற்றுவதுசங்கத் தமிழன் தீங் ளிப்போ சிந்தை சேர்ந்த சிவத்தொழியோ அறிவு பழுத்த அமைவளமோ யாதெனப் புகல்வது? இவை யாவுந் திரண்டெழுந்த ஞானத்திருவுருவோ என் என்று சொல்லுவது அகத்தியமாமுனிவரின் எண்ணந் தோன்றுகிறது.

இவரிடம் கற்ற கற்கின்ற இளஞ் சிறார்கள் என்ன புண்ணியஞ் செய்தனர். வெகுளாது விரையாது ஐயந்தீர மாணவர் அறிவுக்கேற்க உள்ளத்தூன்ற உரைத்து உரைத்து பால்மணம் மாறாப் பாலர்தமையும் பாவலராக்குந் தன்மையர். சாந்தம் பொறுமை வெகுளாமை சத்தியம் முதலிய நற்குணங்கள் நிறைந்த சத்துவ குணக் குன்றெனல் மிகையாகாது. யாகாவாராயினும் நாகாக்க என்ற முதுமொழியை வாழ்க்கையில் நடத்திக்காட்டும் உயர்வுடையவர். மிகத் தெளிவாகப் பேசும் பேராற்றலுடையவர். மேடை மீதேறும் வரையிலும் மேடையிலும் மேடை விட்டிழிந்த பின்னும் எஞ்ஞான்றும் இன்சொற் பகர்ந்து செஞ்சொற் பெருக்கி வன்சொற் கடிந்து பொன்சொல் வழங்கும் சொக்கன் அவர்களைச் சொல்வேந்தன் என்று அழைப்பது சாலவும் பொருந்தும்.

இவருடன் பலநாட் பழகுதல் வேண்டா ஒரு நாட் காணின் ஒருகாற்கேடகின் ''அன்பராகுதரன்றி மன்பதையுலகில் மற்றையரிலரே'' எனவே நன்னாட்டுச் சான்றோர்களே நண்பர்களே சைவப் பேரடியார்களே அறிஞர்களே மாணவர்களே நீவிர் எல்லோரும் வருக வருக உங்கள் வரவு நல்வரவாகுக என வரவேற்பதுடன் தமிழ்ப் பேரறிஞன் சொக்கன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது நல்லாசியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். சொக்கன் மேலும் நீண்டகாலத் தேகாரோக்கியத்துடன் இருந்து சைவப் பணியும் தமிழ்ப் பணியும் புரிய இறைவன் அருள்புரிவாராக என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

## நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் ஆசியுரை

தகை சார்ந்த சைவ பெரியீர்

அறிஞர் திரு. க சொர்க்கலிங்கம் எம். ஏ அவர்கட்கு ''மணிவிழா'' எடுக்க விருப்பறிந்து பெரு மகிழ்ச்சி. ஒரு தகுதி வாய்ந்த பெரியாரைக் கௌரவிப்பதானால் அவர் வாழ்நாளில் இதைச் செய்யும் போது தான் அவர் மகிழ்ச்சியுறுவார். இதைக் காணும் போது நாமும் உளப்பூரிப்

பரியன அவற்றை எல்லாம் சேர்த்து ஒரு நூலகம் அமைத்து விடலாம் இவருடைய சொற்பொழிவுகளைப் பன்முறை கேட்டு மகிழ்ந்தோம். அவர் பேச்சு ஒருதனிப்பாணி அதில் தத்துவார்த்தங்கள் அறிவுரைகள், ஆராய்ச்சிகள் ஆகியன நிறைந்திருக்கும். எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் இலகு தமிழா

## மேஜர் சலாமின் நினைவு
### விளையாட்டு போட்டி

வீரவேங்கை மேஜர் சலாமின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி இமையாணன் விளையாட்டு கழகம் நடாத்தும் கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை இமையாணனில் நடைபெறவுள்ளது.

இரவு நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது.

## சொக்கன் மணிவிழாச் சபைத் தலைவர் திரு. தி. கமலநாதன் எம். ஏ. வழங்கும் மணிவிழாச் செய்தி

அறிஞர்களையும், பெரியோர்களையும் மதித்துவாழப் பழகுதல் நல்லதொரு வாழ்க்கை நெறியாகும். பழந்தமிழர் கண்ட கல்விமரபும் இத்தகையதே.

முற்காலத்தில் குருகுல முறையிற் கல்விகற்கும்போது மாணவர்கள் குருபக்தியுடன் செயற்பட்டுத்தமதுவாழ்க்கையினை அமைத்துக் கொண்டனர். குருபக்தி அவர்களுக்குச் சகல செல்வங்களையும் பெற்றுக் கொடுத்தது.

தவர்கள் நாயன்மார்கட்டு மக்கள். அறிஞர்கள் பெரியோர்களைப் போற்றி அர்ச்சித்து வாழ்ந்து பழகியவர்கள். பெரியவர்களை - நாயன்மார்களை - மதித்து மடம்அமைத்துப் பூசித்தவர்கள் எமது முன்னோரர்.

அவர்கள் வழிவந்த நாங்கள் பெரியார், அறிஞர் சொக்கன் அவர்களுக்கு விழாக்காண்பது பொருத்தமானதொன்றே தமிழ் உலகுக்கும் சைவ உல

வகையில் உத்தரவாத விலையும் அதிகரிக்கப்பட்டது.

நாடுமுழுவதுமே உணவுப்பொருள்களின் உற்பத்தியில் மக்கள் ஈடுபட்டனர்.

கடும் உழைப்புக்கு பெயர்பெற்ற வடபகுதிக் கமக்காரர்கள் உற்சாகத்துடன் உணவு தானிய உற்பத்தியிலீடுபட்டனர்.

வெங்காயம், செத்தல் மிளகாயில் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யமுடியுமென்பதை வடபகுதி விவசாயிகள் நிரூபித்துக் காட்டினர்.

தரிசாகக் கிடந்த நிலங்களெல்லாம் வெங்காயம், மிளகாய், உழுந்து, பயறு என்றும் குரக்கன், சாமை, எள்ளு என்றும் செய்கை பண்ணப்பட்டன. வீடுகளில் ஓர் அங்குலம் நிலம்கூட வெறுமையாகக் கிடக்கவில்லை. வீட்டுத்தோட்டங்களில் மரவள்ளியும் காய்கறிகளும் உற்பத்தி செய்யப்பட்டன.

காசுப் பயிரான புகையிலைச் செய்கையை கைவிட்டு மிளகாயும் வெங்காயமும் உற்பத்தி செய்யப்பட்டன.

செத்தல் மிளகாயும் வெங்காயமும் தினமும் தென்னிலங்கைக்கு வடபகுதியிலிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருந்தன.

வடபகுதி விவசாயிகளின் பொருளாதாரமும் துரிதமாக முன்னேறிக்கொண்டிருந்தது.

1977-ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஜே. ஆர் தலைமையிலானஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தது. லலித் அத்துலத்முதலி வர்த்தக கப்பற்றுறை அமைச்சரானார்.

அத்துலத்முதலி அமைச்சரானதும் முதல் செய்த வேலை வெங்காயம், செத்தல்மிளகாய் உட்பட சகல பொருள்களையும் தாராளமாக இறக்குமதி செய்தது தான்.

வடபகுதி வெங்காயத்துக்கும் மிளகாய்க்கும் மதிப்புக் குறைந்தது; விலை பெருமளவில் வீழ்ச்சியடைந்தது வடபகுதி விவசாயிகளின் பொருளாதாரத்தில் பெருத்த அடி விழுந்தது.

மிளகாய்ச் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்ட வட பகுதி இளைஞர்கள் அதைக் கைவிட்டனர். வேலை வாய்ப்புத்தேடி வெளிநாடுகளுக்குப் படையெடுத்தனர்.

மற்றும் விவசாயிகள் வெங்காயம், மிளகாய் மற்றும் உபஉணவுச் செய்கையை கைவிட்டு மீண்டும் காசுப்பயிரான புகையிலைச் செய்கையை மேற் கொண்டனர்.

இந்நிலையில் பயங்கரவாத ஒழிப்புஎன்ற பெயரில் தேசிய பந்தோபஸ்து அமைச்சராகப் பதவியேற்ற அத்துலத்முதலி தமிழ்ப் பகுதிகளில் ஆயுதப்படைகளின் நடவடிக்கைகளை அதிகரித்தார். விவசாயம் பாதிக்கப்பட்டது.

அடுத்து அமைதிப்படை என்று வந்த இந்திய இராணுவம் வயல்களிலும் தோட்டங்களிலும் தனதுபடை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர்.

இவை தவிர வெளிநாடுகளுக்குச் சென்ற இளைஞர்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணம் பயிர்ச் செய்கைக்குரிய தோட்டக்காணிகளில் வீடுகளும் கடைகளுமாக எழுந்து பயிர்ச்செய்கைக்கு இடமில்லாமல் செய்து விட்டது.

என்றாலும் உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கமளிக்கப் பட்டால் மீண்டும் உபஉணவில் தன்னிறைவு காண முடியும் என்ற நம்பிக்கை நமது விவசாயிகளுக்கு உண்டு.

## நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

## ஆசியுரை

தகை சார்ந்த சைவ பெரியீர்

அறிஞர் திரு. க சொர்க்க லிங்கம் எம். ஏ அவர்கட்கு ''மணிவிழா'' எடுக்க விருப் பறிந்து பெரு மகிழ்ச்சி. ஒரு தகுதி வாய்ந்த பெரியாரைக் கௌரவிப்பதானால் அவர் வாழ்நாளில் இதைச் செய்யும் போது தான் அவர் மகிழ்ச்சி யுறுவார். இதைக் காணும் போது நாமும் உளப்பூரிப் படைவோம். இதுவே முக் கிய நோக்கம். இவர் பட்டம் பாராட்டுக்களை விரும்பாத வர் இதனை இவர் அணியும் ஆடம்பரமில்லாத உடையும் சொக்கன் என்னும் புனை பெயரும் சான்றுபகர்வன இந் நாட்டில் மட்டுமல்ல தமிழ கத்திலும் சொக்கனை அறி யாததமிழ்மக்கள்இல்லை என லாம் அமரர் வாசீக கலாநிதி கி. வா. ஐ ஐயர் அவர்களின் அன்பையும் மதிப்பையும்பெற் றவர். தாம் எழுதுவதுபோல பேசுவார், தாம் பேசுவது போல எழுதுவார். இத்திறன் வாய்க்கப் பெற்றோர் மிகச் சிலரே சைவசமய முன்னேற் றத்திற்கும் நற்றமிழ் வளர்ச் சிக்கும் அவர்கள் எழுதிய நூல்கள், கட்டுரைகள் அளப் பரியன அவற்றை எல்லாம் சேர்த்து ஒரு நூலகம் அமை த்து விடலாம் இவருடைய சொற்பொழிவுகளை' பன் முறை கேட்டு மகிழ்ந்தோம். அவர் பேச்சு ஒருதனிப்பாணி அதில் தத்துவார்த்தங்கள் அறிவுரைகள், ஆராய்ச்சிகள் ஆகியன நிறைந்திருக்கும். எல்லோரும் புரிந்து கொள் ளும் வகையில் இலகு தமிழா கவுமிருக்கும். இவை வெறும் புகழ்ச்சியல்ல. உண்மை.

இவரிடம் பாடம் கேட்டு உயர் உத்தியோகம் வகித்தும் முன்னணியில் நிற்கும் மாணக் கர் ஏராளம் கல்வி புகட்டல் தானங்களில் சிறந்த பெரும் தர்மம். இதை அவர் நிரம்ப ஈட்டியுள்ளார். சொக்கன் நோய் நொடியின்றி நீடு வாழ்ந்து சைவத்துக்கும், தமி ழுக்குமான அவரின் அரிய சேவை தொடர வேண்டு மென எல்லாம் வல்ல பரம் பொருளின் பாதார விந்தங் களை உளமாரத்தியானித்து அவர்களுக்கு எமது நல்லாசி களை வழங்குகிறோம்.

என்றும்வேண்டும்இன்ப அன்பு

## மேஜர் சலாமின் நினைவு

### விளையாட்டு போட்டி

வீரவேங்கை மேஜர் சலா மின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி இமையாணன் விளையாட்டு கழகம் நடாத்தும் கழகங்க ளுக்கு இடையிலான மெய் வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை இமையாணனில் நடைபெறவுள்ளது.

இரவு நிகழ்ச்சிகளும் நடை பெறவுள்ளது.

## கற்பித்தல் பயிற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை பயிலு நர்கள் கற்பித்தல் பயிற்சி எதிர்வரும் 4ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை நடை பெறும்.

## இல்ல விளையாட்டு போட்டி

ஒலுவில் அல்ஹம்றாமஹா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி ஜூன் 6 ஆம் திகதி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். என பாட சாலை அதிபர் ஜனாப் மீரா சாஹிப் தெரிவித்தார். (46)

### திரு. தி. கமலநாதன் எம். ஏ.

## வழங்கும் மணிவிழாச் செய்தி

அறிஞர்களையும், பெரி யோர்களையும் மதித்துவாழப் பழகுதல் நல்லதொரு வாழ்க்கை நெறியாகும். பழந் தமிழர் கண்ட கல்விமரபும் இத்தகையதே.

முற்காலத்தில் குருகுல முறையிற் கல்விகற்கும் போது மாணவர்கள் குருபக்தியுடன் செயற்பட்டுத்தமதுவாழ்க்கை யினை அமைத்துக் கொண்ட னர். குருபக்தி அவர்களுக்குச் சகல செல்வங்களையும் பெற் றுக் கொடுத்தது.

பெரியோர்கள் ஆசி எமக்குக் கிடைப்பதால் எமது வாழ்வு வளம்பெறுகின்றது. அவர் களை மதித்துப் போற்றுவ தால் எமக்குப் பெருமை சேரு கிறது. இதனால் நாம் எமது எதிர்கால சமூகத்தினருக்கும் வழிகாட்டினோம் என்ற பெரு மைக்குள்ளாகின்றோம்.

பெரியோர் துணை எமக்குக் கிடைக்கும்போது இன்னா செய்யாமை, இனியவைகூறல் ஊக்கமுடைமை, வாய்மை போன்ற நல்ல பண்புகள் எம்மை வந்தடைகின்றன. இதனாலேதான் வள்ளுவப் பெருந்தகை,

'அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித்- தமராக் கொளல்' என்று கூறுகின்றார்.

இப்பண்பினை நன்குணர்ந் தவர்கள் நாயன்மார்கட்டு மக்கள். அறிஞர்கள் பெரி யோர்களைப் போற்றி அர்ச் சித்து வாழ்ந்து பழகியவர்கள். பெரியவர்களை - நாயன்மார் களை - மதித்து மடம்அமைத் துப் பூசித்தவர்கள் எமது முன்னோர்.

அவர்கள் வழிவந்த நாங்கள் பெரியார், அறிஞர் சொக்கன் அவர்களுக்கு விழாக்காண்பது பொருத்தமானதொன்றே தமிழ் உலகுக்கும் சைவ உல குக்கும் சொக்கன் அவர்கள் தமது கவிதையாலும், கட்டு ரைகளாலும், சிறுகதைகளா லும், நாவல்களாலும் காட்டிய பாதைசிறப்பானது. பழமைக் குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் அவர் வாழ்ந்து காட்டிஎம்மையும்வாழ்விக்கும் முறைபோற்றப்படக் கூடியது

அப் பெரியார் இன்று(1990- 06 - 02) தமது அறுபதாவது அகவையைப் பூர்த்திசெய்து நிற்கின்றார். அவரது ஊர் மக்களும், நண்பர்களும் அன் பர்களும் அவரை வாழ்த்து கின்றன;விழாக்காண்கின்றனர்

சொக்கன் அவர்கள் பல் லாண்டு வாழ்ந்து தமிழ்த் தொண்டு புரிய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

## சைவப்பிரகாச வித்தியாலயத்துக்கு 5 லட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டிடம்

(பருத்தித்துறை)

''பாடசாலைகளில் நிலவும் பற்றாக் குறைகள் நீக்கப்படும் போது மாணவர்களின் கல்வித் தரம்மேம்பாடடையும். இதனைக்கருத்திற் கொண்டே பாடசாலைகளின் பற்றாக் குறைகள் திரட்டப்பட்டு முன் னுரிமை அடிப்படையில் அப் பற்றாக்குறைகள் படிப்படி யாக நீக்கப்பட்டு வருகின் றன.

இவ் வித்தியாலயத்தில் நில வும் வகுப்பறைகள் பற்றாக் குறையை நீக்குவதற்கு மாடிக் கட்டிடம் ஒன்றை நிர்மாணிப் பதற்கு இன்று அடிக்கல்நாட்டி வைப்பது மிக மகிழ்ச்சிக்குரி யதாகும்''

இவ்வாறு,மேலைப் புலோலி சைவப் பிரகாச மகாவித்தியா லயத்தில் சுமார் ஐந்துலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக் கப்படவுள்ள மாடிக்கட்டிடத் திற்கான அடிக்கல் நாட்டு விழாவிலே பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்டு அடிக் கல்லை நாட்டி வைத்து உரை யாற்றிய புலோலி கொத்தணி அதிபர். திரு.வி.சே.ஏகாம்பர நாதன் குறிப்பிட்டார்.

அடிக்கல் நாட்டுவிழாவிற்கு வித்தியாலய அதிபர் திரு ந. சிவபாதசுந்தரம் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய கொத்தணி அதிபர்திரு.ஏகாம் பரநாதன் குறிப்பிட்டதாவது

மாணவர்களின் கல்வி அபி விருத்திக்கும், பாடசாலைக ளின் வளர்ச்சிக்கும் ஆசிரியர் கள் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் இணைந்து ஒரு குடும்பம் போலச் செயற்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுமானால் பாடசா லைகள் எமது எதிர் காலச் சந்ததியினரின் பூரண அறிவு வளர்ச்சிக்கு முழுமையான பங் கினையாற்ற முடியும்.

புலோலிக் கொத்தணிப் பாடசாலைகளின் 5ஆம்ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இவ் வித்தியாலய மாணவர் கள் ஏழு பேர் சித்தியடைந் துள்ளனர். எதிர்காலத்திலும் இது போன்ற பல்வேறு துறை களிலும் இவ் வித்தியாலயம் அபிவிருத்தியடைந்து மாணவ கல்வி உலகிற்கு வழிகாட்டி யாகத் திகழ வேண்டும்.

அதிபர். திரு. சிவபாதசுந்த ரம் தலைமை உரையில் குறிப் பிட்டதாவது

இவ் வித்தியாலய மாணவர் களின் கல்வி அபிவிருத்திக் கும், வித்தியாலய வளர்ச்சிக் கும் பெற்றோர்கள் ஆற்றி வரும் பணிகள் பாராட்டப் பட வேண்டியனவாகும். இவ் வித்தியாலய சுற்றுப் புறப் பாதுகாப்புக்கான சுற்றுமதில் அமைப்பு வேலைகள் பெற் றோர்களின் உதவியினாலேயே பூரத்தியடைந்தது.

மேலும் மாணவர்களின்குடி நீர்ப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்முகமாக தண்ணீர் தாங்கி ஒன்றை நிர்மாணிப்ப தற்கும் பெற்றோர்கள் முன் வந்துள்ளது மகிழ்ச்சிக்குரிய தாகும். இன்று அரசாங்கத் தால் மாடிக்கட்டடத்தை நிர் மாணிப்பதற்கான நிதியும் வழங்கப் பட்டதையடுத்தே இன்று அடிக்கல் நாட்டும் விழா நடை பெற்றுள்ளது. தொடர்ந்தும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் போதிய ஒத் துழைப்பு வழங்கி வித்தியா லயவளர்ச்சியில்பங்குகொள்ள வேண்டும் என்றார்.

## கல்விப்பகுதி ஊழியருக்கு 50வீத ஊக்குவிப்பு அலவன்ஸ்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண பாட சாலைகளில் கடந்த வருடம் ஜூலை முதல் டிசம்பர் வரை யிலான காலப்பகுதியில் கட மையாற்றி ஓய்வு பெற்றுள்ள இடமாற்றம் பெற்றுள்ள ஆசி ரியர்கள், கல்வி இலாகா ஊழி யர்கள் 50 வீத ஊக்குவிப்பு அலவன்ஸ் பெற தகுதியுடை யவர்கள். மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கு விண்ண ப்பம் செய்து பெற்றுக்கொள் ள[illegible]ம்.

இ[illegible] தகவலை வட-கிழக்கு மாகா[illegible]ண கல்வி அமைச்சின் செய[illegible]ாளர் திரு இ. ஜே. சற் குண[illegible]ாஜா செய்தியாளர்களி டம் [illegible]ரிவித்தார்.

5[illegible]ஊக்குவிப்பு அல வன்[illegible] வழங்க மாதாந்தம் 2 கோடி 30 இலட்சம் ரூபா தேவைப்படுகிறது.

மத்திய அரசு இந்நிதி வழ ங்க மறுத்துள்ளதால் சேமிப்பு மூலம் கட்டம் கட்டமாக இவ் அலவன்ஸ் வழங்கப்படுகிறது.

ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெற்றவர்களுக்கும் இவ் அலவன்ஸ் வழங்கப்படும். ஆசிரிய கலாசாலை விரி வுரையாளர்களுக்கு வழங்க முடியாது. இதற்கான நிதி மத்திய அரசிடமிருந்து கோரி யுள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார். (37)

## மாநகரசபையிடம் ஒப்படைக்கப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாடிவீடு பாவனையிலிருந்த இரு குளிர் சாதன பெட்டிகளை பாது காப்பு கருதி தனது வீட்டிற்கு எடுத்து சென்ற மாநகரசபை யின் முன்பு கடமையாற்றிய அதிகாரியொருவர் இரு குளிர் சாதன பெட்டிகளையும் மாநகரசபையிடம் ஒப்படைத் துள்ளார்.

வாடிவீடு பாவனையிலிருந்த மேற்படி குளிர்சாதன பெட்டி கள் இந்தியபடை முகாம் காரணமாக அவ் அதிகாரி எடுத்து சென்றார்.

கடந்த வாரம் இரு குளிர் சாதன பெட்டிகள் ஒப்படைக் கப்பட்டன. அவை பாவனை க்கு உதவாத நிலையிலிருப் பதாக தகவலறிந்த வட்டா ரங்கள் தெரிவித்தன.

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# இலங்கைக்கு வெளிநாட்டுப் படை உதவிக்கு வந்தது புதிதல்ல!

## முன்னர் வந்த இந்தியப்படை திரும்பிச் சென்றதில்லை 87இல் வந்தது திரும்பியது

(கொழும்பு)

''சிங்கள மன்னர்கள் முன்னர் இங்கு ஆட்சி செய்த போது தாம் ஆட்சிக்கு வருவதற்காகவோ அல்லது ஆட்சியை ஸ்திரப்படுத்தவோ இந்திய இராணுவத்தை வரவழைத்துள்ளனர்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா நேற்று கொழும்பு சட்டக் கல்லூரியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய ஜே. ஆர். மேலும் கூறியதாவது

பெரிய நாடுகளாக இருந்தாலும் சரி சிறிய நாடுகளாக இருந்தாலும் சரி ஒரு காலத்தில் பகைமை நாடுகளினால் படையெடுக்கப் பட்டுள்ளன. அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளும் இவ்வாறான நிலைமைகளுக்கு ஆளாகியுள்ளன. இலங்கை அன் இரண்டாயிரத்து எண்ணூறு ஆண்டுகளைக் கொண்ட நீண்ட வரலாற்றில் பெரும்பாலான காலப்பகுதியில் சுதந்திரமாக விளங்கிய போதிலும் இவ்வாறான நிலைமைகளுக்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

### அன்று திரும்பியதில்லை இன்று திரும்பியது

இந்தியாவில் இருந்து இங்கு அனுப்பப்பட்ட படையினர் திரும்பிச்சென்றது கிடையாது அப்படியாக திரும்பிச் செல்ல வேண்டும் என்ற நிபந்தனைகளும் அமையவில்லை: ஆனால் 1987இல் இங்கு வந்த இந்திய இராணுவம் நிபந்தனையுடன் வந்து, அதற்கு அமைய அது விலகியது.

ஒரு நாடு தனக்கு உதவும்படி நேசநாடு ஒன்றிடம் கோரிய பல சந்தர்ப்பங்கள் உள்ளன. அதன்படி இலங்கையும் இந்தியாவிடம் இராணுவ உதவி கோரியது ஒரு புதுமையல்ல.

1962 இல் அன்றைய இந்திய பிரதமர் ஜவகர்லால் நேருவின் கோரிக்கையின் பேரில் சீனாவுக்கு எதிராக இந்தியாவுக்கு உதவ அமெரிக்க இராணுவத்தை அனுப்பிவைத்தது.

இரண்டு வருடங்களாக அமெரிக்க இராணுவம் விமானங்கள் சகிதம் புதுடில்லியில் தங்கியிருந்தன.

### பாதுகாப்புக்கான சமாதான ஒப்பந்தம்

இலங்கையில் ஐக்கியம், இறைமை பிரதேச கௌரவம் ஆகியவற்றை பேணும் வகையிலும் வடக்கு, கிழக்கு பகுதி ளில் உள்ள சகல சமூகத்தினரதும் பாதுகாபபை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

எனினும் ஒரு தீவிரவாதக் குழு ஆயுதங்களை ஒப்படைக்கத் தவறியதால் இந்தியப் படையின் பங்கு எதிர்பராத வகையில் மாற நேரிட்டது,

இந்நியப் படையின் இந்தப் போக்குக் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான பேச்சுவார்த்தையில் பங்குபற்றி ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ள. இணங்கியது என்றார்.

## கிளிநொச்சி டிப்போவுக்கு 5லட்சம் ரூபா ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

பன்முகப் படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து கிளிநொச்சி போக்குவரத்துச் சபைக்கு ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது

கிளிநொச்சி சாலை அத்தியட்சகர் திரு- ஏ. பத்மநாதன் மேற்படி சாலையின் குறைபாடுகளையும், பஸ் பற்றாக்குறையையும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகருக்கு எடுத்துக் கூறியதைத் தொடர்ந்தே இப்பணம் ஒதுக்கப்பட்டது,

அரசாங்க அதிபரினால் ஒதுக்கப்பட்ட பணத்துக்கு புதுஇயந்திரம பொருத்தப் பட்ட நல்ல நிலையில் உள்ள பஸ் ஒன்றை வழங்க வட பிராந்திய போக்கு வரத்துச் சபை முன்வந்துள்ளது.

கிளிநொச்சிச் சாலையில் இதுவரை 14 பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன. இன்னும் 10 பஸ்களாவது இருந்தால் தான் ஓரளவு நல்ல சேவையை கிளிநொச்சி மக்களுக்கு வழங்கக் கூடியதாக இருக்குமென சம்பந்தப்பட்ட அதிகரி ஒருவர் தெரிவித்தார்.

இங்குள்ள பஸ்களில் 7பஸ்கள் பாவிக்க முடியாத நிலையில் உள்ளன. இது தவிர தற்போது பாவனையிலுள்ள பஸ்கள் கூடுதலானவை மிகவும் பழமை வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. (49)

## உலக வங்கி உதவியுடன் இரணைமடுக் குளம் புனரமைப்பு

(கிளிநொச்சி)

இலங்கையிலுள்ள பாரிய குளங்களில்ஒன்றான இரணைமடுக்குளம் உலக வங்கியின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. அதற்காக உலக வங்கி நிபுணர்கள் இம்மாத நடுப்பகுதியில் இங்குவரவுள்ளனர்.

வட்டக்கச்சி இராமநாதபுரம் திட்ட உப குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய இரணைமடுக்குள திட்ட முகாமையாளர் திரு. வி. கதிரவேலு மேற்கண்டவாறு கூறினார்.

திட்ட முகாமையாளர்திரு. கதிரவேலு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

தற்போது அரசின் கொள்கைப்படி பாரிய நீர்ப்பாசன குடியேற்றத் திட்டங்களில் திட்ட உப குழுக்களை அமைத்து, அவர்கள் மூலம் நீர் வினியோகம், வாய்க்கால் பராமரித்தல், கால்நடை வளர்த்தல் போன்ற சமூக பொருளாதார திட்டவேலைகளில் சகலரையும் ஈடுபடுத்தவுள்ளோம்.

விவசாயிகளின் ஒத்துழைப்புடனேயே பாரிய நீர்ப்பாசனத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம்.

1985ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த முகாமைத்துவம் செயற்படத் தொடங்கியது. அப்போது ஒரு போக வயல்ச் செய்கைக்கு 7.8 ஏக்கர் அடியாக இருந்த நீரின் அளவு தற்போது 5ஏக்கர் அடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் 2.8 ஏக்கர் அடி நீரை நாம் சேமிக்கத் தொடங்கியுள்ளோம். சேமிக்கப்படும் நீரைக் கொண்டு கூடுதலான நிலத்தில் பயிரைச் செய்யமுடியும். இது விவசாயிகளின் ஒத்துழைப்பால் ஏற்பட்ட நன்மையே.

குறைந்த அளவு நீரை உபயோகித்து கூடுதல் உற்பத்தியைச் செய்வதால் விவசாயிகளும், நாட்டு மக்களும், அரசும் கூடிய பயனை அடைய முடியும்.

இரணைமடுக்குளத் திட்டத்தில் 12 திட்ட உப குழுக்கள் உண்டு. விவசாயிகள் தமக்குள்ள பிரச்சினைகளை திட்ட உப குழுக்கள் மூலம் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். மாதம் 1 முறை திட்ட முகாமையாளர் அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் உப குழு உறுப்பினர்கள் இருவர் கலந்துகொள்வர்.

நீர்ப்பாசனம், பராமரிப்பு, விதை பசளை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இக் கூட்டத்தில் ஆராயப்படும்.

இக் கூட்டத்தில் விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களின் தலைவர்களும் கலந்துகொண்டு உங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பர் என்றார். (49)

## மூன்று மாதமாகியும் கடவுச்சீட்டில்லை

(வவுனியா)

வவுனியா கச்சேரி ஊடாக கடவுச் சீட்டுக்கு விண்ணப்பித்தவர்கள் பலருக்கு, மூன்று மாதங்களாகியும், கொழும்பிலிருந்து கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்படவில்லை.

விண்ணப்பித்தவர்களில் பலர் இது சம்பந்தமாக

டியதற்கான பற்றுச் சீட்டு ஒட்டப்படவில்லை என்றும் இதனால்தான் கடவுச்சீட்டுகளை அனுப்பி வைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டதாம்.

கொழும்பில் உள்ள கடவுச் சீட்டுகளுக்கான விண்ணப்பங்

### மாகாணசபை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரான நீதியமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் இப் பேச்சுக்களில் கலந்து கொண்டார்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள பல்வேறு பொருளாதார, அரசியல், கல்வி, விவசாயம், சமூக நிர்வாகம் போன்ற பிரச்சினைகள் குறித்து இப் பேச்சுக்களின் போது ஆராயப்பட்டன.

இந்திய இராணுவம் வடக்கு கிழக்கு பகுதியிலிருந்து வெளியேறிய பின்னர் கடந்த மூன்று மாதங்களாக வடக்கு கிழக்கு பகுதிகளின் நிலைமை பெருமளவு சீரடைந்துள்ளதாக விடுதலைப் புலிகளின் குழுவினர் ஜனாதிபதிக்குத் தெரிவித்தனர்.

மக்களின் அன்றாட வாழ்க்கை சகல துறைகளிலும் வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும் சிவில் நிர்வாகம் திறமையாக செயற் படுவதாகவும் ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

#### வட-கிழக்கில் அரசியல் சூன்ய நிலை

வடக்கு கிழக்கு மகாண சபை செயலிழந்து இருப்பதால் அங்கே அரசியல் சூன்ய நிலை தோன்றியுள்ளது இதனால் வடக்கு கிழக்கு பகுதி மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர். மாகாணசபை உடனடியாக் கலைக்கப்பட்டு மீண்டும்தேர்தல் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

வடக்கு கிழக்கு பகுதிகளில் அரசியல் நிர்வாகம் சீராக இயங்க இவை வழி வகுக்கும் நாட்டை மேலும் பிளவு படுத்த உதவக் கூடிய அரசியல் யாப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் இவ்வாறு விடுதலைப் புலிகள் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினார்,

#### பேச்சு மூலம் பிரச்சினைக்கு தீர்வு

வடக்கு கிழக்கு பிரச்சினைகளுக்கு பேச்சு வார்த்தைகள் மூலமாக தீர்வு காண அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது என்று ஜனதிபதி பிரேதாஸா விடுதலைப் புலிகளுக்கு தெரிவித்தார்.

சகல பிரச்சினைகளையும் பேச்சு வார்த்தை மூலமாக தீர்த்து வைக்க வேண்டும். என்ற குறிக்கோளுடன் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது வடக்கு கிழக்கில் அரசியல் சூன்ய நிலையை போக்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள மக்கள் நேர்மையாக நடத்தப்படும் தேர்தலில் இதன் மூலம் தமது வாக்குகளை தமது பிரதிநிதிகளை தெரிவு செய்ய முடியும். நீதியாகவும் நேர்மையாகவும் உள்ள ஒரு சமுதாயத்ததை கட்டி எழுப்பப் இதன் மூலம் மக்களை பிரித்து வைக்கும் குறைபாடுகள் தீர்த்து வைக்கப்படும்.

இன ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் உறுதிப்படுத்துவதற்கு ஆக்க பூர்வமானசில நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே எடுத்துள்ளது இலங்கையில் அமைதியும் சுபிட்சமும் நிலைத்திருப்பதற்கு இவையே முக்கியமானது இவ்வாறு ஜனாதிபதி விடுதலைப் புலிகளிடம் தெரிவித்தார்.

### நாடு பூராகவும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் காண்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது,

யாழ்ப்பாண தேர்தல் அலுவலக அதிகாரி ஒருவர் இந்த வாக்காளர் விபரம் சேகரிப்பதுபற்றி கருத்து தெரிவிக்கையில் வாக்காளர் இடாப்பில் பெயர் இடம் பெறும் பொழுது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இதில் முதலாவதாக வாக்காளர் ஒருவர் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும். இதில் இந்திய வம்சாவளியினராக இருப்பின் 1988 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க நாடற்றோருக்கான பிரஜா உரிமை வாங்கும் (விசேடஏற்பாடுகள்) சட்டத்திற்கிணங்க சத்தியக்கடதாசி சமர்ப்பிக்குமிடத்து அவர் இலங்கைப் பிரஜையாக ஏற்றுக்கொள்ளப்படுவார்.

இரண்டாவதாக கவனிக்கப் படும் முக்கிய விடயம் இலங்கையில் பிறந்தும் வேறு ஒரு நாட்டில் வாழும் ஒருவருக்கு

### யாழ்தேவி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது பற்றி ரயில்வே பகுதி உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் மருதானையில் ரயில் பெட்டிகள் விடப்படும் 'யார்ட்டில்' உள்ளவர்கள் சிலரது வேலையாலேயே இவ்வாறு நடைபெறுவதாக கூறினார்.

ரயில்வே பகுதிக்கு தற்போது அதிக வருமானம் பெற்றுத் தரும் வடபகுதி ரயில்களுக்கு போதிய வசதிகள் செய்யப்படவேண்டும் என பிரயாணிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், சில முக்கிய ரயில் நிலையங்களில் உள்ள குடிநீர்தொட்டிகளில் போதிய நீர் இல்லையெனவும் பிரயாணிகள் குறை கூறுகின்றனர்.

பாடசாலை

லா ற் றில் பெரும்பாலான காலப் பகுதியில் சுதந் ரமாக விளங்கிய போதிலும் இவ்வா றான நிலமைகளுக்கு விதி

தது.

இ ர ண் டு வருடங்களாக அமெரிக்க இராணுவம் விமா

# மூன்றுமாதமாகியும் கடவுச்சீட்டில்லை

(வவுனியா)

வவுனியா கச்சேரி ஊடாக கடவுச் சீட்டுக்கு விண்ணப் பித்தவர்கள் பலருக்கு, மூன்று மாதங்களாகியும், கொழும்பி லிருந்து கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்படவில்லை.

வி ண் ண ப் பி த் தவர்களில் பலர் இது ச ம் ப ந் த ம க கொழும்பு சென்று கடவுச் சீட்டு அலுவலகத்தில் விசா ரித்த போது, விண்ணப்பதாரி களின் க ட வு ச் சீட்டுகளில் பணம் கட்டிய பற்றுச்சீட்டின் இலக்கம்தான்குறிக்கப்பட்டுள் ளது ஆனால், பணம் கட் டியதற்கான பற்றுச் சீட்டு ஒட்டப்படவில்லை என்றும் இதனால்தான் கடவுச்சீட்டு களை அனுப்பி வைப்பதில் தாதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டதாம்.

கொழும்பில் உள்ள கடவுச் சீட்டுகளுக்கான விண்ணப்பங் கள் நூற்றுக்கணக்கில் தேங் கியுள்ளன என்று அறியப்படு கிறது.

இதனால் கடவுச் சீட்டுப் பெறுவதற்காக விண்ணப்பித் தவர்கள் கஷ்ட நிலைக்குள் ளாகியுள்ளனர். (தி)

# போக்குவரத்துச்சபை மக்கள் மயமாக்குதல் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத் துச் சபையை மக்கள் மய மாக்கும் திட்டம் நேற்று ஆரம்பமானது.

இத்திட்டத்தின்படி போக்கு வ ர த் து ச பை கள் நடவ டிக்கைகளை மேற்பார்வை செய்யவென விசேட நடவ டிக்கைக்குழு ஒன்று நியமிக் கப்படவுள்ளதாக போக்கு வ ர த் து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மென் டிஸ் தெரிவித்தார்.

இக் குழுவின் தலைவராக போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஏ ஆர். எம். ஜெயவர்த்தனா இக்குழுவின் தலைவராக பணிபுரிவார்.

போக்குவரத்துச் சபையின் கீழ் உள்ள டிப்போக்கள் இக் குழுவின் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளன.

நானூறு கோடி ரூபா பெறு மதியுள்ள நிதி மூலவளங்களில் 50 சதவீதமானவை ஊழியர் களுக்கு வழங்கப்படவுள்ளன என்றும் மேலும் இரண்டாயி ரம் பஸ் வண்டிகளைத் திருத் துவதற்கும் ந ட வ டி க் கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் விஜயபால மென் டிஸ் தெரிவித்தார்

போக்குவரத்துச் சேவைக ளும் வழமைபோல நடை பெறும் எனவும் அவர் மேலும் சொன்னார்.

## 4000 கிராமோதய

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

மாகாண சபையின் நிர்வா கம் திறமையாகச் செயற்படு வதற்குப் பாராளுமன்ற அங் கத்தவர்களுக்கும், மாகாண சபை உ று ப் பினர்களுக்கும் இடையே ஒத்துழைப்பு, ஆத ரவை ஏற்படுத்த ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையில் விரைவில் கொழும்பில் நடை பெறவுள்ளதாகவும் அமைச் சர் கூறினார்.

## கடவுச்சீட்டில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ந டை மு றை யை க் கடைப் பிடிக்க வேண்டும் என கொழு ம்பு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திலிருந்து சுற்ற நிருபம் ஒன்று அனுப்பப்பட் டுள்ளது.

இதைவிட மத்திய கிழக்கு கிழக்காசியநாடுகளுக்கு [illegible] வரும் முன்புபோல மு[illegible]று ரூபா செலுத்தினா[illegible]து மெனவும் அறி[illegible]ள் ளது. (ம)

மாத நடுப்பகுதியில் இங்குவர வுள்ளனர்.

வட்டக்கச்சி இ ரா ம நா த புரம் திட்ட உப குழுக் கூட் டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய இ ர ணை ம டு க் கு ள திட்ட முகாமையாளர் திரு. வி. கதிரவேலு மேற்கண்ட வாறுகூறினார்.

திட்ட முகாமையாளர்திரு. கதிரவேலு தொடர்ந்து பேசு கையில் கூறியதாவது;

தற்போது அரசின் கொள் கைப்படி பாரிய நீர்ப்பாசன குடியேற்றத் தி ட் ட ங்களில் திட்ட உப குழுக்களை அமை த்து, அ வ ர் க ள் மூலம் நீர் வினியோகம், வா ய் க் கா ல் பராமரித்தல், கா ல் ந டை ளவுள்ளோம்.

1985ஆம் ஆ ண் டு ஒருங்கி ணைந்த மு கா மை த் து வம் செயற்படத் தொடங்கியது. அப்போது ஒரு போக வயல்ச் செய்கைக்கு 7.8 ஏக்கர் அடி யாக இ ரு ந் த நீரின் அளவு தற்போது 5ஏக்கர் அடியாகக் கு றை க் கப்பட்டுள்ளது. இத னால் 2.8 ஏக்கர் அடி நீரை நாம் சேமிக்கத்தொடங்கியுள் ளோம். சேமிக்கப்படும் நீரைக் கொண்டு கூடுதலான நிலத் தில் பயிரைச் செய்யமுடியும். இது வி வ சா யி களின் ஒத்து ழைப்பால் ஏ ற் ப ட் ட நன் மையே.

குறைந்த அளவு நீரை உப யோகித்து கூடுதல் உற்பத்தி குள்ள பிரச்சினைகளை திட்ட உப குழுக்கள் மூலம் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். மாதம் 1 முறை திட்ட முகா மையாளர் அ லு வ ல கத்தில் நடைபெறும் கூட்டத்தில் உப குழு உறுப்பினர்கள் இருவர் கலந்துகொள்வர்.

நீர்ப்பாசனம், பராமரிப்பு, விதை பசளை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இக் கூட்டத் தில் ஆராயப்படும்.

இக் கூட்டத்தில் விவசாயத் தோடு சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களின் தலைவர் களும் கலந்துகொண்டு உங்க ளின்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பர் என்றார். (49)

## றோகண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி(

குழந்தைகளுக்கும், இ ர ண் டு ஆண் கு ழ ந் தை க ளு க் கும் தாயாகியிருக்கும் தி ரு ம தி விஜேவீராவும் குழ ந் தை யு ம் நலமேயுள்ளனர். திரு. விஜே வீரா சில மாதங்களுக்கு முன் கொல்லப்பட்டது தெரிந்ததே

## காணிப்பதிவு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில காலம் இது இயங்கி வந் தது.

பின்னர் 1987இல் இந்தியப் படையினர் இக்கட்டத்தில் குடி கொண்டதால் றக்கா வீதிக்கு இடமாற்றப்பட்டது.

இந்த அலுவலகம்இவ்வாறு இடமாற்றம்செய்யப்பட்டுவரு வதால் காணிப்பதிவு வேலை கள் தடைப் பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ ...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தி குழப்பத்தை ஏற் படுத்துவதற்கு முஸ்லிம் காங் கிரஸ் கட்சியும் அவர்களது எஜமான்களும் முயன்று வரு கினறார்கள். இது அ வ ர் களுக்கு ஒருபோதும் வெற்றி அளிக்கப் போவதில்லை. விடு தலைப்புலிகளை யாரும் அடக் கவும் முடியாது. அழிக்கவும் முடியாது. இதுவே இலங்கை கண்ட அனுபவ வரலாறு; முஸ்லிம்களின் வாழும் நிலம், சமய, கலாச்சார பண்பாட்டு உரிமைகள் யாவும் விடுதலைப் புலிகளினால் என்றும் பாது காக்கப்படும்! எமது தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் முஸ்லிம்களுக்கு தீய சக்தி களிடமிருந்து பாதுகாப்பு என் றும் வழங்கப்படும், அவர்க ளது உரிமைகள் பாதுகாக்கப் படும் என எமக்கு உறுதியளித் துள்ளார். நாங்கள் பரிபூரண மாக எமது தலைவர் பிரபா கரன்மீதும் எமது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதும் அசையாத நம்பிக்கை கொண் டுள்ளோம், முஸ்லிம்களின் பாதுகாப்புக் கவசம் விடுத லைப் புலிகளே'' (52)

## இந்தியா - பாக்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் ஓர் அணு ஆயுத யுத்தம் ஏற் பாடு என்றும், இவ்வாறு ஓர் அணுவாயுத யுத்தம் ஏற்படும் என மேற்குலகத்தினால் பிரச் சாரம் செய்யப்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்தியாவோ அல்லது பாகிஸ்தானோ அணு ஆயுதங்களைப் பாவிக்குமே யானால் அது பாவிக்கும்நாடு களுக்கும் தவிர்க்கமுடியாமல் பெரும் சேதத்தை ஏற்படுத்து மெனத் தெரிவித்தார். இரு நாடுகளும் அண்டை நாடுக ளாக இருப்பதே காரணம்என வும் குறிப்பிட்டார்.

## பள்ளிவாசல்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிரனேட்டுக்களும் இந்திய இராணுவமும் தமிழ் தேசிய இராணுவமும் கூட்டாக நட வடிக்கை மேற்கொண்ட காலத்தில் பள்ளிவாசலுக்குள் வைக்கப் பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

## சொக்கனுக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

(நந்தி) அவர்கள் ஆற்றுவார்.

மேலும் பல எழுத்தாளர் களும் கலைஞர்களும் இம் மணிவிழா கொண்டாட்டங்க ளில் கலந்து கொள்வர். (லோ)

## சிவகுமாரன்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள கொடித்தின வாரத் தின் போது பொது மக்கள் தங்களால் இயன்ற ஆதரவை வழங்குமாறு கேட்கப்பட்டுள் ளனர்.

## மினிவான் விபத்து பலர் படுகாயம்

கீரிமலை - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் மினி வானொன்று நேற்று நண்ப கல் இளவாலையில் விபத் துக்குள்ளானது. படுவேக மாக இவ் வானைச் சாரதி ஓட்டியமையாலேயே இவ் விபத்து ஏ ற் ப ட் ட து. கீரி மலையில் இருந்து யாழ்ப்பா ணம் நோக்கிச் சென்ற இவ் வான் இளவாலைச் சந்திக்கு சிறிது தூரம் தள்ளியமைந் துள்ள மதவொன்றின் மீது மோதி, பின் மரமொன்று டன் மோதி ப ள் ள த் தி ல் பாய்ந்தது.

இவ் விபத்தில் வான் சாரதி ஜோர்ஜ் சார்ள்ஸ் உட் பட எண்மர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். விபத் திற்குள்ளான வானும் பலத்த சேதமடைந்தது. (மு)

## .000 மெ. தொன்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயத்தை இறக்குமதி செய் துள்ளது.

ஒரு கிலோ 17 ரூபா 50சதப் படி எ து வி த கட்டுப்பாடும் இன்றி பலநோக்குக் கூட்டுற வுச் சங்கங்கள் மற்றும் கூட்டு றவு மொத்த விற்பனவு கிளை கள் மூலம் விற்கப்படும்.

மேலும் ஆயிரத்து இருநூறு மெற்றிக் தொன் வெண்காயம் அடுத்த வாரம் இங்கு வரவுள் ளது.

## வடக்குக்-..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மும் நடைபெறும். இக்கூட் டத்திற்கு மாகாண சபைச் செயலாளர் திரு. கணேச நாதன் அவர்கள் தலைமை தாங்குவார். இக்கூட்டத்தில் யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் அவர்களும் கலந்து கொள்வார். (ம)

கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இதில் முதலாவதாக வாக் காளர் ஒருவர் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண் டும். இதில் இந்திய வம்சா வளியினராக இருப்பின் 1988 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க நாடற்றோருக்கான பிரஜா உரிமைவாங்கும் (விசேடஏற்பாடுகள்) சட்டத் திற்கிணங்க சத்தியக்கடதாசி சமர்ப்பிக்குமிடத்து அவர் இலங்கைப் பிரஜையாக ஏற் றுக்கொள்ளப்படுவார்.

இரண்டாவதாக கவனிக்கப் படும் முக்கிய விடயம் இலங் கையில் பிறந்தும் வேறு ஒரு நாட்டில் வாழும் ஒருவருக்கு இங்கு நிலையான சொத்து ரிமைகள் இருப்பின் அவரை வாக்காளர் இடாப்பில் சேர்த் துக் கொள்ளப்படும்.

இவற்றுடன் 18 வயது நிரம் பிய ஒவ்வொருவரும் சேர்த் துக் கொள்ளப்படுவார்கள் என அவ்வதிகாரி தெரிவித் தார். (லோ

மருதானையில் ரயில் பெட் டிகள் விடப்படும் 'யார்ட் டில்' உள்ளவர்கள் சிலரது வேலையாலேயே இவ்வாறு நடைபெறுவதாக கூறினார்.

ரயில்வே பகுதிக்கு தற் போது அதிக வருமானம் பெற்றுத் தரும் வடபகுதி ரயில்களுக்கு போதிய வசதி கள் செய்யப்படவேண்டும் என பிரயாணிகள் தெரிவிக் கின்றனர்.

அத்துடன் சில முக்கிய ரயில் நிலையங்களில் உள்ள குடிநீர்தொட்டிகளில் போதிய நீர் இல்லையெனவும் பிரயாணிகள் குறை கூறுகின் றனர்.

## பாடசாலை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளத்தில் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இச் சிங்கள மொழிச் சிக்க லினால் பாடசாலை அதிபர் களும், ஆசிரியர்களும் பெரும் கஷ்டமடைந்துள்ளார்கள். (98)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மேஜர் சலாம் (சி. நல்லராசன்)

வீரஜனனம்: 17.9.1956

வீரமரணம்: 2.6.1988

உன்
நினைவுகள்
வந்து வந்து போகின்றன!
மரணித்த வேங்கையே..
உன்
மரணம்
சுதந்திரதேசத்தின்
ஜனனம்
நீ உச்சரித்த வார்த்தை
எமது
மந்திரம்
உனது பாதச் சுவடுகள்
எமது போராட்டத்தின்
படிக் கற்கள்

(B 1074)

நண்பர்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.